# இந்திய அரசியலமைப்பு - பகுதி - 27 to 38

## 27. சமுதாயம்

- மனிதர்கள் கூட்டமாக ஒருங்கிணைந்து வாழ்வது சமுதாயம்.
- கிரேக்க மேதை அரிஸ்டாட்டில் ஒரு மனிதன் ஒரு சமுதாய விலங்கு என்று கூறினார்.
- மனிதன் ஒருவருக்கொருவர் இணைந்து செயல்படுவதால் ஏற்படும் சமுதாய உறவுகள் சார்ந்து வாழ்தல் எனப்படும்.
- சமுதாய அமைப்புகள் என்பது குடும்பம், பள்ளி, கல்லூரி, வழிபாட்டுத்தலம், விளையபாட்டு மையம், கேளிக்கை அரங்கு, மருத்துவமனை போன்றவைகள்,
- சமுதாய அமைப்புகள் மக்களை ஒன்றிணைக்கும் உறவுப் பாலங்களாக விளங்குகின்றன.
- குடும்பம் மற்றும் பள்ளி ஆகிய இரண்டும் குழந்தைகளுக்கு செம்மையான சமுதாய வாழ்கையை கற்றுக் கொடுக்கின்றன.
- சமுதாயத்தின் அடிப்படை குடும்பம் ஆகும்.
- சமுதாயத்தின் இரண்டாவது அடிப்படை பள்ளிக்கூடம் ஆகும்.
- சமுதாயம் என்பது காலப்போக்கில் மாறும் தன்மை கொண்டது. அறிவியல் முன்னேற்றங்கள் காரணமாகவும், தொலைத்தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியினாலும் நிறைய மாற்றங்களைக் கொண்டுள்ளது.
- நமது சமுதாய வாழ்க்கை நகரம், கிராமம் என்ற இரண்டு அடிப்படைக் கூறுகளைக் கொண்டது.
- இந்திய மக்களில் பொரும்பகுதியினர் கிராமப் பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்களின் முக்கியத் தொழில் வேளாண்மை ஆகும்.
- கிராமங்கள் இந்தியாவின் உயிர்நாடி என்று கூறியவர் காந்தியடிகள்.
- இயற்கையோடு இணைந்த வாழ்க்கையே கிராமத்தின் சிறப்பு ஆகும்.
- அலுவலகப் பயன்பாடு பெருநகரங்களில் (Cosmopolitan) வளர்ந்து வருகிறது.
- கிராமப்புற மக்களின் அறியாமையை போக்க அறிவொறி இயக்கம், அனைவருக்கும் கல்வி இயக்கம் போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டன.

### சமுதாயக் குழுக்கள்

- ஒரு சமுதாய மக்களில் அவர்கள் செய்யும் தொழில் மற்றும் ஆற்றும் கடமை போன்றவற்றின் அடிப்படையில் பல்வேறு குழுக்களாக பிரிக்கலாம். எடுத்துக்காட்டாக ஆசிரியர்கள், அலுவலர்கள், மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், காவலர்கள், பொறியாளர்கள் போன்ற சமுதாயக் குழுக்கள் உள்ளன.

- சமுதாயத்தின் ஆணிவேராக விளங்குபவர்கள் ஆசிரியர்கள் ஆவார்.
- ராதாகிருஷ்ணன் ஆசிரியராக பணியாற்றி பின்பு இந்தியாவின் உயர்ந்த பதவியான குடியரசுத் தலைவர் பதவியை அடைந்தா. இரவது பிறந்த நாளான செப்டம்பர் 5 அன்று ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது.
- அரசாங்கத்தையும், பொதுமக்களையும் இணைக்கும் பாலமாக விளங்குவது அலுவலர்கள் ஆவர்.
- நீதியும், ஒழுங்கும் நிறைந்த சமுதாயம் நிறைவான சமுதாயமாக திகழ முடியும்.

## 28. ஊரகம், நகர்ப்பகுதி

- இக்காலத்தில் கிராமங்களை விட்டுப் பலர் நகரங்களுக்கு இடம் பெயர்ந்து சென்று வாழ முற்படுகின்றனர். ஆனால், ஊரகப் பகுதிகளிலிருந்து நகர்ப்பகுதி கடினமாக உள்ளது.
- நகரம், மாநகரம் என்பவை அதிக மக்கள்தொகை கொண்டவை. மாநகரங்களில் மக்கள்தொகையின் அடர்த்தி அதிகம்.
- மாநகரங்களைச் சுற்றிலும் சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால் கிராமப் பகுதிகள் தொடங்குகின்றன. இவை ஊரகப் பகுதிகள் என்று அழைக்கப்படுகின்றன.
- ஊரகப் பகுதிகளில் மக்கள் பெரும்பாலும் விவசாயம், நெசவுத்தொழில், கைத்தொழில், செங்கற்சூளை, அரிசி ஆலை, மீன்பிடித்தல் போன்ற பல்வேறு வேலைகளில் ஈடுபடுகின்றனர். இன்றைய சூழலில் ஊரகப் பகுதிகளுக்கும், நகர்ப்பகுதிகளுக்கும் இடையே பெரும் இடைவெளி அதிகரித்து வருகின்றது.
- விவசாயம், சீராகவும், விரிவாகவும் நடைபெறும் விளைச்சல் காலம் வரையில் விவசாயத் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலைகள் கிடைத்தன. அண்மைக்காலமாக மேய்ச்சல் நிலங்கள் வீட்டு மனைகளாகி வருகின்றன.
- விவசாயம் முடங்கி வருவதால், விவசாயத் தொழிலாளர்கள் வேலையைத் தேடி நகர்ப்பகுதிகளுக்கு இடம் பெயர்கின்றனர். வேலையைத் தேடி நகர்ப்பகுதிகளுக்குச் செல்கிற இத்தகைய மக்களே, அங்குச் சாலைகள், மேம்பாலங்கள், குடியிருப்புகள் போன்ற கட்டுமானப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

**அரசின் பல்வேறு நலத்திட்டங்கள்**

- ஊரக - நகர்ப்பகுதி இடைவெளியைக் குறைக்க முயல்கின்றன.
- வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வேலை உறுதியளிப்புத் திட்டம்.

- ஊரகப் பகுதிகளுக்கான போக்குவரத்து வசதிகள் ஒவ்வோர் ஊராட்சிக்கும் கட்டமைப்பு வசதிகளை வழங்கும்.
- நியாயவிலைக் கடைகளில் மலிவு விலை உணவுப் பொருள்கள் வழங்குதல்
- பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள அனைத்துப் பிரிவுத் தொழிலாளர்களுடைய குழந்தைகளின் தொடக்கக் கல்வியை உறுதி செய்வதற்கு, "அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டமும்", அதனைத் தொடர்ந்து இடைநிலைக் கல்வியைத் தொடர, "அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டமும்" செயல்படுத்தப்படுகின்றன.

## 29. மக்களாட்சி

- மக்களாட்சி முறை அல்லது ஜனநாயக முறை சமீப காலங்களில் சிறந்த அரசாங்க முறையாகக் கருதப்படுகிறது.
- எதேச்சதிகார ஆட்சி முறையிலிருந்து மக்களாட்சி முறை மாற்றம் பல பெரும் போராட்டங்களுக்கு பிறகு மக்கள் பெற்றனர்.

**மக்களட்சி விளக்கம்**

- சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் ஹெரோடோட்டஸ் என்பவரால் மக்களாட்சி என்ற சொல் முதன் முதலாக பயன்படுத்தப்பட்டது.
- ஆங்கிலத்தில் Democracy என்ற சொற்களிலிருந்து பெறப்பட்டதாகும். Demos மற்றும் Cratia என்ற சொற்களிலிருந்து பெறப்பட்டதாகும். Demos என்றால் மக்கள் என்றும் Cratia என்ற அதிகாரம்/ஆட்சியைக் குறிக்கும். எனவே மக்களாட்சி என்பது மக்கள் அதிகாரத்தைக் குறிக்கிறது.
- பழங்கால கிரேக்க ரோமானிய அரசுகள் மக்களாட்சி முறையை பின்பற்றினர்.
- மக்காட்சி என்பது மக்கள் நேரடியாகவோ அல்லது தங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ தங்கள் அதிகாரத்தை செலுத்து ஆட்சி முறையாகும்.
- அமெரிக்க ஜனதாதிபதி ஆபிரகாம் லிங்கன்: ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக மக்களே ஆட்சி செய்வது ஆகும்.
- பேராசிரியர் ஷீலே: ஜனநாயகம் என்பது ஒரு அரசாங்க முறையாகும். இதில் அனைத்து மக்களும் பங்கு பெறுகின்றனர் எனக் குறிப்பிடுகிறார்.
- மக்களாட்சி என்பது பலருடைய அரசாங்கம் என்று குறிப்பிட்டவர் கிரேக்க அறிஞர் அரிஸ்டாடில்.

**மக்களாட்சி வகைகள்**

- மக்களாட்சி முறை, நேரடி மற்றும் மறைமுக மக்களாட்சி என இரு வகைப்படும்.

**1.நேரடி மக்களாட்சி**

- மக்கள் நேரடியாக மக்களாட்சி முறையில் பங்கேற்பர்.
- பண்டைய கிரேக்கம் மற்றும் ரோமானிய நாகரிகத்தில் நடைபெற்று வந்தது.
- பண்டைய இந்தியாவில், கிராம பஞ்சாயத்து முறையில் நேரடி மக்களாட்சி நடைபெற்றன.

**2.மறைமுக மக்களாட்சி**

- மக்கள் நேரடியாக பங்கு பெறுவதை விடுத்து தங்கள் பிரதிநிதிகள் மூலம் பங்கு பெறுகின்றனர்.
- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசாங்கத்தை உருவாக்கி நடத்துவர்.
- பெரும்பாலான நாடுகளில் மறைமுக மக்களாட்சி முறை பின்பற்றப்படுகிறது.
- அரசியல் கட்சிகள் ஆட்சி முறையில் பெரும் பங்கு வகிக்கின்றன.

**மக்களாட்சியின் நன்மைகள்**

- தற்கால உலகில் ஜனநாயக முறை சிறந்த அரசாங்க முறையாகும்.
- சிறந்த அரசாங்கம் அமைய வழி ஏற்படுத்துகிறது மக்கள் உரிமைகளுக்குப் பாதுகாப்புக் கிடைக்கிறது.
- சமத்துவம் நிலை நாட்டப்படுகிறது.
- மக்கள் கல்வி அறிவு பெற உதவி
- நாட்டு நலன் மேம்படுகிறது.
- அமைதியான முறையில் அரசங்கத்தை ஏற்படுத்துகிறது.
- போர் ஆயுதங்களை நம்பாமல் வாக்குப்பெட்டியை நம்புகிறது.
- ஜனநாயக ஆட்சி முறையில் புரட்சிகள் மற்றும் கிளர்ச்சிகளுக்கு இடமில்லை.

**மக்களாட்சியின் தீமைகள்**

- ஜனநாயக முறை ஒழுங்கற்ற அரசாங்கம் அமைய வழிவகுக்கிறது.
- தகுதிக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளில் பெரும்பான்மையினர் அறியாமை மிக்கவர்களாகவும், தகுதியற்றவர்களாகவும் மற்றும் அனுபவமற்றவர்களாகவும் உள்ளனர்.
- அதிக செலவினைக் கொண்ட அரசாங்கம் அமைய வழி செய்கிறது.
- தனிநபர் அல்லது சிறுபான்மையினருக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை.
- இது கட்சி முறை அரசாங்க முறைக்கும் வகுப்புக் கலவரங்களுக்கம் வழி செய்கிறது.

**மக்களாட்சியின் முக்கியத்துவம்**

- ஜனநாயக முறையின் கீழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை சுதந்திரமாக தேர்ந்தெடுக்கின்றனர். இதனால் மக்கள் மதிக்கப்படுகின்றனர்.
- மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பு கிடைக்கிறது. குறிப்பாக வாழும் உரிமை மற்றும் சுதந்திர உரிமைக்கு அரசியலமைப்பு உத்திரவாதம் வழங்குகிறது.
- ஜனநாயகத்தில் அனைத்து முடிவுகளும் பெரும்பான்மை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.
- மக்கள் நலனை மேன்மையடைச் செய்கிறது. சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் போன்ற கொள்கைகள் ஜனநாயகத்திற்கு அடிப்படையாகத் திகழ்கின்றன.

**அரசியல் கட்சிகள்**

- ஜனநாயக ஆட்சி முறைக்கு கட்சி முறை முதன்மையான தேவையாகும். அரசாங்கம் சுமூகமாக நடைபெற கட்சிகள் வழி செய்கின்றன.
- ஜனநாயக முறையின்படி பெரும்பான்மை பெற்றுள்ள கட்சியே அரசாங்கத்தை நடத்துகிறது. அதேசமயத்தில் எதிர்கட்சி, ஆளுங்கட்சியின் தவறுகளை சுட்டிக்காட்டி அதிகாரத்தை தவறான வழிகளில் செலுத்தவிடாமல் செய்கிறது.
- ஆளுங்கட்சி ஆட்சியுரிமைக்பெற்றுள்ளது, எதிர்கட்சி அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமையைக் கொண்டுள்ளது. மேலும், ஆளுங்கட்சியின் குறைபாடுகள் மற்றும் கொள்கைகளை விமர்சனமும் செய்கிறது. ஒருமித்த கருத்துடைய மக்களால் அரசியல் அதிகாரத்தைப் பெறும் நோக்கில் உருவாக்கப்பட்ட அமைப்பே அரசியல் கட்சியாகும்.

**அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள்**

- ஜனநாயக அரசியலில், அரசியல் கட்சிகள் பல்வேறு கடமைகளை ஆற்றுகின்றன. இவை ஜனநாயக முறை நிலைத்திருக்கவும், சிறப்பாக செயல்படவும் பெரிதும் உதவுகின்றது.
- பொதுக் கொள்கைகளை உருவாக்குதல்.
- தேர்தலில் போட்டியிடுதல்
- மக்களுக்கு கல்வி அறிவு புகட்டுதல்.
- அரசாங்கத்தை நடத்துவது மற்றும் விமர்சிப்பது.
- அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக திகழ்வது.
- மக்களை ஒன்று திரட்டுவது அல்லது இணைக்கும் அமைப்பாக செயல்படுதல்.

**கட்சி முறையின் வகைகள்**

- அரசியல் கட்சிகளை ஜனநாயக முறையில் 3 வகைகளாகப் பிரிக்கலாம்.

**1.ஒரு கட்சி முறை**

இம்முறையின் கீழ் ஒரே ஒரு கட்சி மட்டும் இருக்கும். இதுவே மக்களாலும் அரசியலமைப்பாலும் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கும். எத்தகைய எதிர்ப்பும் இன்றி அரசியலதிகாரத்தைப் பெற்று செயல்படுத்தும். மற்ற கட்சிகள் செயல்படாது. எ.கா. கியூபா மற்றும் சீனா

**ஒரு கட்சி முறையின் நிறைகள்**

அவசரக் காலங்களில் அல்லது ஆபத்தான காலங்களில் ஒரு கட்சி முறை திறமையாகவும் சுதந்திரமாகவும் விரைவில் செயல்பட்டு ஆவணச் செய்ய முடியும்.

- ஒரு கட்சி முறையில் முடிவுகள் விரைவில் எடுக்கப்படும் வாய்ப்புகள் உள்ளன. செலவினங்கள் சிக்கனமாகவும் அமையும்.
- நாட்டின் பெருமைகளை பெருமளவு உயர்த்துகிறது.

**ஒரு கட்சி முறையின் குறைகள்**

- ஒரு கட்சி முறையில் தேசிய அளவிலான விவாதங்கள் நடைபெற இயலாது. சாதாரண சுதந்திரங்களும் மறுக்கப்படுகின்றன.
- ஒரு கட்சி முறை திறமையற்றதாக இருந்தால் நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகள் மிகவும் பாதிக்கப்படும்.
- ஒரு கட்சி முறை எதேச்சதிகாரம் மற்றும் சர்வாதிகார முறை போன்றவற்றிற்கு வழிவகுக்கிறது.

**2.இரு கட்சி முறை**

- இருகட்சி முறையில் ஒரு கட்சி ஆளுங்கட்சியாகவும் மற்றொரு கட்சி எதிர்கட்சியாகவும் இருக்கும் இம்முறையில் ஒரு கட்சி அரசாங்கத்தை சுட்டிக்காட்டி அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தும். எ.கா. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் இங்கிலாந்து.

**இருகட்சி முறையின் நிறைகள்**

- இரண்டு கட்சிகள் இருப்பதால், மக்களுக்கு ஆளும் கட்சியைத் தேர்ந்தெடுப்பது எளிதாக இருக்கிறது.
- எதிர்கட்சி ஆளும் கட்சியை விழிப்போடு செயல்பட வைக்கிறது.

**இருகட்சி முறையின் குறைகள்**

- இருகட்சி முறையில் இரண்டு கட்சிகளும் மோசமாக இருக்குமேயானால் மூன்றாவது கட்சியை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பே இல்லை.
- இவ்விரு கட்சிகளும் தங்களுக்குள்ளேயே ஒருவிதமான உடன்பாட்டிற்கு வந்தால் மக்கள் முட்டாளாக்கப்படுவார்கள். அதனால் கட்சியின் தவறுகள் மற்றும் ஊழல்களை மறைக்க வழிகள் உண்டு.

**3.பலகட்சி முறை**

- இம்முறையின் கீழ் இரண்டிற்கு மேற்பட்ட கட்சிகள் இருக்கும். எ.கா: இந்தியா மற்றும் பிரான்சு.

**பல கட்சி முறையின் நன்மைகள்**

- பல கட்சிகள் இருப்பதால் ஒவ்வொரு கட்சியும் ஆட்சியைப் பிடிக்கும் ஆர்வத்தில் நல்ல திட்டங்களை சிந்தித்து செயல்படுத்த முடியும்.
- இரண்டு கட்சிகளில் உள்ள தலைவர்களை மட்டும் நம்பியிராமல், புதிய கருத்துகளையும் புதிய கோணத்தில் பிரச்சனைகளை தீர்க்கும் சக்தியுள்ள புதிய தலைவர்களையும் தேர்வு செய்ய முடியும்.

**பல கட்சி முறையின் குறைகள்**

- பல கட்சிகளில் ஊழல், பிராந்திய உணர்வு, ஒரு சார்புடைமை முதலியவற்றை ஊக்குவிக்கக் கூடும்.
- ஆளும் கட்சி மக்களின் நன்மையைக் கருதாமல், தன் ஆட்சியாளர்களின் நன்மையைக் கருத வாய்ப்புண்டு.
- ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்குத் தாவுகின்ற கட்சித் தாவல் நடைபெறுவதின் மூலம் அரசின் நிலைத் தன்மைக்கு ஊறு ஏற்படும்.

**இந்தியாவின் அரசியல் கட்சிகள்**

- இந்திய அரசியல் கட்சிகளை இருவகைகளாகப் பிரிக்கலாம். 1. தேசியக் கட்சி 2. மாநில கட்சி

**தேசியக் கட்சிகள்**

- இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு, நாடாளுமன்றத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 6சதவீத வாக்குகளைப் பெறும் கட்சிகள் தேசிய கட்சிகள் அல்லது பிராந்தியக் கட்சிகள் என்றழைக்கப்படும். (உ.ம்) தி.மு.க, அ.தி.மு.க மற்றும் தெலுங்கு தேசம்.

**தேர்தல்**

- மக்களாட்சியின் வெற்றி என்பது ஒரு நாட்டில் குறிப்பிட்ட இடைவேளைக்கு பிறகு நடத்தப்படும் தேர்தலைப் பொறுத்து அமைந்துள்ளது. இத்தேர்தல்கள் மூலமே மக்கள் ஆளும் கட்சியின் செயல்பாடுகளை மதிப்பிட முடியும். இதன்மூலம் ஊழல் புரிகின்ற அரசியல் வாதிகளை விடுத்து, அவர்களுக்கு வாக்களிக்காமல் மற்றவர்களை ஆராய்ந்து தேர்ந்தெடுக்க முடியும். இவைகளை நடைமுறைப்படுத்த எல்லா ஜனநாயக நாடுகளும் வயது வந்தோர் வாக்குரிமை என்பதை நடைமுறைப்படுத்தி பின்பற்றி வருகின்றன.

**வாக்குரிமை**

- இந்தியாவில் 18 வயது நிரம்பியவர்கள் தேர்தல்களில் வாக்குகளைச் செலுத்த உரிமையுள்ளவராகிறார்கள். 25 வயது நிரம்பிய இந்தியக் குடிமகன் தேர்தலில் போட்டியிடவும் அனுமதிக்கப்படுகிறார்.

**இந்தியாவில் தேர்தல் முறைகள்**

1. **நேரடித் தேர்தல் முறை**

- குடிமக்கள் தாங்களே நேரடியாக வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை நேரடித் தேர்தல் முறை எனப்படும்.
- இந்தியாவில் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை இம்முறையிலேயே ஆகும்.

2. **மறைமுகத் தேர்தல் முறை**

- குடிமக்கள் நேரடியாக தங்களது வாக்குகளை செலுத்தாமல், தங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை மறைமுகத் தேர்தல் முறையாகும்.
- நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினர்கள், குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவர் இம்முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

3. **இடைத்தேர்தல்கள்**

- ஏதாவது ஒரு தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் மரணமடையலாம், அல்லது பதவியை விட்டு விலகலாம். அத்தகையச் சூல்நிலையில் அந்தத் தொகுதிகளில் மட்டும் தேர்தல் நடைபெறும். இத்தேர்தல்களுக்கு இடைத் தேர்தல்கள் என்று பெயர்.

4. **இடைப்பருவத் தேர்தல்கள்**

- நாடாளுமன்றமோ, அல்லது மாநில சட்டசபைகளோ அது செயல்படுவதற்குரிய ஆண்டுகள் முழுமையும் (தற்போது ஐந்தாண்டுகள்) பல்வேறு காரணங்களால் செயல்பட முடியாது இடையில் கலைக்கப்பட்டால், மீண்டும் அவற்றுக்குத் தேர்தல் நடத்தப்படும். இதற்கு இடைப் பருவத் தேர்தல்கள் என்று பெயர்.

**எதிர்கட்சிகளின் பங்குகள்**

- மக்களாட்சியின் வெற்றி என்பது எதிர்கட்சிகளின் செயல்பாட்டை ஒட்டியே அமைகிறது. மக்களாட்சியில் எல்லா கட்சிகளுக்கும் பெரும்பன்மை கிடைப்பது அரிதாகும். இச்சமயங்களில் குறைந்த இடங்களைப் பெற்ற அரசியல் கட்சிகள் எதிர்கட்சிகளாகும்.
- லோக் சபாவில் ஆளுங்கட்சிக்கு அடுத்தபடியாக இடங்களைப் பெறும் கட்சி அங்கீகரிக்கப்பட்ட எதிர்கட்சியாகும். எதிர்கட்சித் தலைவர் ஆளுங்கட்சி அமைச்சருக்கு சமமான அதிகாரங்களைப் பெற்றுள்ளார்.
- அரசியல் சட்டப்படி வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைப் பெற்ற ஆளும் கட்சிகள் எவ்வாறு முக்கியமானதாகக் கருதப்படுகிறதோ, அதுபோலவே எதிர்கட்சிகளின் பங்கும் மக்களாட்சியில் இன்றியமையாததாகும்.
- ஆளும் கட்சிகள் ஏசேச்சதிகார மனப்பான்மையுடன் செயல்படாமல் இருக்கவும், அவர்களின் அதிகாரங்களை வரையறுத்திடவும் செயல்படாமல் இருக்கவும், அவர்களின் அதிகாரங்களை வரையறுத்திடவும், அவர்களைக் கண்காணிக்கவும் எதிர்கட்சிகள் முக்கிய பணிகளை மேற்கொள்கின்றன. இவர்களது முக்கிய பணி ஆளும் கட்சி கொள்கைகளை விமர்சிப்பதாகும்.
- எதிர்கட்சிகளுக்கு அரசாங்கத்தின் செலவினங்களை அறிந்து கொள்ள முழு உரிமையிருக்கின்றது. கேள்வி நேரங்களில் ஆளும் கட்சியினரை விமர்சிப்பதன் மூலம், தவறான முறையில் ஆளுங்கட்சியினர் அதிகாரங்களை பயன்படுத்துவதற்கு எதிர்கட்சியினர் தடைக்கற்களாக இருக்கின்றனர்.

**மக்களாட்சி ஒரு தேசத்திற்கு உதவுகிறது**

- இந்திய அரசியல் சாசனம், மக்களாட்சி கொள்கையினை அடிப்படையாகக் கொண்டது. இந்தியா பாராளுமன்ற ஜனநாயக முறையைக் கொண்டது.
- இந்திய அரசியல் சாசனம் இரண்டு விதமான அரசாங்களைப் பற்றி குறிப்பிடுகின்றது. ஒன்று மத்திய அல்லது நடுவண் அரசு மற்றொன்று மாநில அரசு ஆகும். மத்திய அரசிற்கு தேர்ந்தெடுக்கப்படும். உறுப்பினர்களை பாராளுமன்ற உறுப்பினர்களை சட்டமன்ற உறுப்பினர்கள் எனவும் அழைக்கிறோம். இவை தவிர உள்ளாட்சி அமைப்புகள் கிராமங்களையும், கரங்களையும் நிர்வகிக்கின்றன.

## 30. வேற்றுமையில் ஒற்றுமை - தேசிய ஒருமைப்பாடு

**இந்தியா பல இனங்களின் அருங்காட்சியகம்**

- பாரதம் என்று அழைக்கப்படும் இந்தியா, ஒரு மிகப்பெரிய நாடாகும். பல மதங்களின் பிறப்பிடமாக இந்தியா திகழ்கிறது.

**மதம்**

- ஆரம்ப காலத்தில் ஆரியர்கள் இந்தியாவில் குடியேறினர். அவர்களை தொடர்ந்து பாரசீகர்கள், கிரேக்கர்கள், குஷாணர்கள், ஹீணர்கள், அரேபியர்கள், மங்கோலியர்கள், மொகலாயர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வந்து தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி, பல புதிய இனங்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தனர். இந்திய மக்கள் சாதி, மதம், மொழி மற்றும் இனத்தால் பலபிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய பிரிவுகளால் இந்தியா மனித இனத்தைப் பற்றி படிக்கக் கூடிய அருங்காட்சியமாகவும், ஆய்வகமாகவும் திகழ்கிறது. எனவே இந்தியா "மனித இனங்களின் அருங்காட்சியம்" எனப்படுகிறது.
- இந்தியா பல மதங்களின் பிறப்பிடமாகவும், சில மதங்களின் வாழ்விடமாகவும் விளங்குகிறது.
- இந்தியாவின் பழமையான மதம் வேத சமயமாகும்.
- கி.பி. முதாலம் நூற்றாண்டில் கிறிஸ்துவ மதம், ஏசுவின் சீடர் செயிண்ட் தாமஸ் என்பவரால் கொண்டு வரப்பட்டது.
- பாரசீகர்களால் பாரசீக மதமான ஜொராஸ்டிரிய மதம் இந்தியாவில் பரப்பப்பட்டது.
- இந்தியாவை கைப்பற்றிய இஸ்லாமியர்கள் இஸ்லாம் மதத்தை இந்தியாவில் பரப்பினர்.
- புத்த மதம், சமண மதம், சீக்கிய மதங்களும் இந்தியாவில் தோன்றின.

**கலாச்சார ஒற்றுமை**

- கலாச்சாரம் என்பது பண்பட்ட சமுதாயத்தின் வெளிப்பாடாகும். இது தனிமனிதன் மற்றும் சமுதாயத்தில் அவனின் செயல்பாடாகக் கருதப்படுகிறது.
- இது மொழி, இனம், இலக்கியம், சமயம், தத்துவம், பழக்கவழக்கங்கள் போன்றவைகள் மூலமாக வெளிப்படுகிறது. இந்தியா பல கலாச்சாரங்களின் ஒன்றினணப்பு மூலம் கலாச்சார ஒற்றுமையைப் பெற்று பன்முக பண்பாட்டு சமுதாயமாக திகழ்கிறது.

- இந்தியா, புவியியல், மதம், மொழி, இன மற்றும் கலாச்சார வேறுபாடுகளை கொண்ட ஒரு பரந்த நாடு. இந்தியாவில் மிக உயர்ந்த மலைகள், தாழ்ந்த கடற்கரைச் சமவெளிகள், வளமிக்க சமவெளிகள், பாலைவனம், பசுமைக் காடுகள், வறண்ட முட்புதர் காடுகள் மற்றும் பலவகையான தாவரங்கள், விலங்குகள் மற்றும் பண்பாடுகளைக் கொண்ட நாடு. இவ்வாறான பன்முக வேறுபாடுகளுக்கிடையே நாம் ஒற்றுமையை காத்து வருகிறோம். நமது பழமையான வரலாறும், வளமையான கலாச்சாரமுமே இந்த ஒற்றுமைக்கு காரணமாகும்.

**மொழிகள்**

- மக்கள் பல மொழிகளைப் பேசுகின்றனர். இந்தியா விடுதலை பெற்றதும் ஒரு குறிப்பிட்டப் பகுதியில் வாழும் பெரும்பான்மையான மக்கள், பேசும் மொழியை அடிப்படையாகக் கொண்டு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது.
- இந்தியாவில் சுமார் 845 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் 22 மொழிகள் அரசியலமைப்பு சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- தேவநாகிரி வடிவிலான இந்தி எழுத்து இந்தியாவின் அலுவலக மொழியாக உள்ளது. ஆங்கிலம் அலுவலக இணைப்பு மொழியாக உள்ளது.
- இணைப்புக் கருவியான மொழி, தற்சமயம் பிரிவினை வாதத்தை தூண்டும் கருவியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. நம் மொழியை போன்றே பிற மொழிகளையும் உயர்வாக கருதினால், அவை நம்முடைய முன்னேற்றம், வளர்ச்சி, சகோதரத்துவத்திற்கு உதவியாக அமையும்.

**இலக்கியம்**

- இந்தியா இலக்கியங்களில் கருவூலமாகத் திகழ்கிறது.
- தமிழில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு, ஐம்பெரும் காப்பியங்கள், பெரிய புராணம், நளவெண்பா, கலிங்கத்துப்பரணி, தேவாரம், நாலாயிரத்திவ்ய பிரபந்தம் போன்றவை தமிழில் சிறப்புமிக்க இலக்கியங்களாகும்.இவை வரலாற்று நிகழ்வுகளை விவரிப்பதோடு மட்டுமல்லாமல் தமிழ் மொழிக்கு அழகு சேர்க்கின்றன.
- சமஸ்கிருத மொழியில் வால்மீகியின் இராமாயணம், காளிதாசரின் மேகதூதம் மற்றும் சாகுந்தலம். இலக்கியத்துறையில் புகழ்பெற்றவைகளாகும்.
- இந்தியர்கள் மொழி, சமயம், சாதி, வேறுபாடுகளின்றி இலக்கிய வளர்த்தினை நுகர்ந்து இன்புறுகின்றனர். இவை இந்திய ஒருமைப்பாட்டை வளர்ப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன.
- இந்திய மொழிகளின் வளர்ச்சி இந்திய இலக்கியங்கள் உன்னத நிலையை அடைய உதவுகின்றன. சம்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகள் நமது

எண்ணத்தையும், சிந்தனையையும் வளர்க்க உதவுகின்றன. இராமாயணமும், மகாபாரதமும் இந்தியாவின் இருபெரும் இதிகாசங்களாகும்.

- திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் தமிழில் மிகச் சிறந்த நூலாக கருதப்படுகிறது.
- பகவத் கீதை இந்துக்களின் புனித நூலாகும். உமறுபுலவரின் சீறாப்புராணம் இறைதூதர் முகம்மது நபியின் வாழ்க்கையைப் பற்றி கூறுவது. வீரமாமுனிவரால் இயற்றப்பட்ட தேம்பவாணி கிறித்துவ மதத்துடன் தொடர்புடையது.

**விழாக்கள்**

- இந்தியா பல்வேறு விழாக்களுக்கு புகழ்பெற்ற நாடாக விளங்குகிறது. தீபாவளி, ராமநவமி, கிருஷ்ண ஜெயந்தி, துர்காபூஜா, (நவராத்திரி) மற்றும் மகரசங்கராந்தி (பொங்கல்) ஆகிய இந்து விழாக்கள் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- மிலாது - நபி பக்ரீத் மற்றும் இரமலான் போன்ற இசுலாமிய விழாக்களுக்கும், புனித வெள்ளி, ஈஸ்டர் மற்றும் கிறிஸ்துமஸ் போன்ற விழாக்கள் கிறித்துவர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.
- சீக்கியர்கள் குருநானக் ஜெயந்தியையும், புத்தர்கள்(பௌத்தர்கள்) புத்த பூர்மணியாவையும், சமணர்கள் மகாவீரர் ஜெயந்தியையும் கொண்டாடி வருகின்றனர்,
- சமய விழாக்கள் மக்களிடையே சகோதத்துவத்தையும், நட்பையும், சமய சகிப்புத்தன்மையையும்,வளர்தது வருகின்றது.
- பல்வேறு சமய விழாக்கள், பல்வேறுபட்ட மக்களால் கொண்டாடப்படுவதால் சமய சகிப்புத்தன்மை ஏற்படுகிறது.

**உணவும், உடையும்**

- தென்னிந்திய மக்கள் அசிரியை உணவாக பயன்படுத்துகிறார்கள். ஆனால் வட இந்திய மக்கள் கோதுமை மற்றும் பருப்பை உணவாகப் பயன்படுத்துகின்றனர்.
- இந்தியாவில் காலநிலை இடத்திற்கிடம் மாறுபட்டுள்ளது. அதற்கேற்ப மக்களின் உடைகளும் வேறுபட்டுள்ளன. காலநிலைக்கு ஏற்ப மக்கள் கம்பளி, பருத்தி, செயற்கையிழைகள் தோல் மற்றும் பட்டினால் நெய்யப்பட்ட போதிலும் பண்பாட்டு நிலையில் அவர்கள் உறுதியுடன் சிறப்புற்று விளங்குகிறார்கள்.
- இந்திய நாடு பல்வேறு படையெடுப்புகளுக்கு உட்பட்ட போதிலும், இந்தியப் பண்பாட்டு பெரும் மாற்றம் இல்லாமல் இன்றும் விளங்குகிறது..

**கலை, கட்டடக்கலை**

- அஜந்தா மற்றும் எல்லோரா ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை, காந்தரக்கலை இந்தியாவின் சற்பக் கலையின் பெருமையை பறைசாற்றுகின்றது.
- காசி, பத்ரிநாத், கேதார்நாத், ஹரித்துவார் மற்றும் பூரி கோவில், புகழ்பெற்ற முஸ்லிம் தர்காக்கள், கிறித்துவ திருச்சபைகள், சாஞ்சி ஸ்தூபி,மவுண்ட் அபுவில் உள்ள சமணம் கோவில், சரவண பெலகோலா போன்றவை சிறந்த வழிபாட்டுத் தலங்களாகவும் மற்றும் இந்திய கட்டடக் கலைக்கு தலைசிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.
- தென்னிந"தியாவில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில், தஞ்சாவூர் - பிரகதீஸ்வரர் ஆலயம், மகாபலிபுரத்திலுள்ள குடைவரைக் கோவில்கள், காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாததர் கோவில் மற்றும் வைகுண்ட பெருமாள் கோவில், திருவண்ணாமலையிலுள்ள அருணாச்சலேஸ்வரர் ஆலயம், வேலூர் மற்றும் சிதம்பரத்தில் உள்ள கோவில்கள், சாந்தோம் திருச்சபை போன்றவை கலை, கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- வட இந்தியர்கள் தென்னிந்தியாவிலுள்ள கோவில்களுக்கும், தேவாலயங்களுக்கும், மசூதிகளுக்கும் புனிதயாத்திரைகள்மேற்கொள்கின்றனர். அதேபோன்று தென்னிந்தியர்கள் வட இந்தியாவிலுள்ள காசி, மதுரா, ரிஷிகேஷ் மற்றும் 'ஹரித்துவார் போன்ற புனித இடங்களுக்கு யாத்திரை மேற்கொள்கின்றனர்.

**இசை மற்றும் நாட்டியம்**

- கர்நாடகம் மற்றும் இந்துஸ்தானி இசைப்பணி இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்டவை.
- பரதநாட்டியம், குச்சிபுடி, கதக், மணிப்புரி மற்றும் ஒடிசா போன்றவை இந்தியாவில் புகழ்பெற்ற நாட்டியங்களாகும். இந்திய இசை மற்றும் நாட்டியம் இந்தியாவில் ஒருமைப்பாட்டை உருவாக்குவதில் பெரும் பங்காற்றி வருகின்றன.
- இந்தியாவில் தோன்றிய கர்நாடகம் மற்றும் இந்துஸ்தானின் இசை முறைகள் பெரும்பாலான மக்களால் விரும்பி கற்கப்படுகின்றன.
- பரதநாட்டியம், குச்சிப்புடி, கதக்களி,மணிப்புரி மற்றும் ஒடிசி போன்றவை இந்தியாவின் புகழ்பெற்ற நடனக் கலைகளாககும்.
- பல்வேறு நாட்டுப்புற நடனங்களும், மக்களால் விரும்பி போற்றி பாதுகாக்கப்படுகின்றன. இந்தியாவில் பல்வேறு நடனம் மற்றும் இசைக்கலைகள் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்க பெரிதும் உதவுகின்றன.

**தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் காரணிகள்**

- வேறுபாடுகள் இருப்பினும் அனைவரும் இந்தியர்கள் என்றழைக்கப்படுகிறார்கள். இந்தியர் என்ற உணர்வுடன் ஒற்றுமையாக வாழ்கின்றனர்.இது தேசிய ஒருமைப்பாடு ஒருமைப்பாட்டை வளர்க்கின்றது. இது தவிர வேறு சில காரணிகளும் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன.
- நவம்பர் 19 - ஆம் நாளை ஒவ்வொரு ஆண்டும் தேசிய ஒருமைப்பாட்டு தினமாக கடைபிடித்து வருவதும், தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க உதவுகிறது.

**தேசிய ஒருமைப்பாட்டை பாதிக்கும் காரணிகள்**

- வகுப்பு வாதம், மொழி வாதம், சாதிபாகுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், வட்டார ஏற்றத்தாழ்வுகள் ஆகியவைகள் ஆகும்.

**வகுப்பு வாதம்**

- வகுப்பு வாதம் என்பது, தான் சார்ந்துள்ள வகுப்பை முதன்மைப்படுத்துவது, சில சமயங்களில் நாட்டைவிட முக்கியமானதாக கருதுவது ஆகும்.
- வகுப்பு வாதம் என்பது ஒரு சமூகம் மற்ற சமூகத்தினருக்கு எதிராக மேற்கொள்ளும் சுயநல தீவிரப் போக்காகும்.

**மொழி வாதம்**

- கி.பி. 1956 - ஆம் ஆண்டு மொழி அடிப்படையில் இந்தியா பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன.
- பொதுவாக மக்கள் தங்கள் தாய் மொழியை அதிகமாக நேசிக்கின்றனர். சில சமயங்களில் பிற மொழிகளிடத்தில் குறுகிய மனப்பான்மை கொண்டு வெறுக்கின்றனர். எனவே பிற மொழிகளை மதித்து பிறமொழி பேசும் மக்களிடையே ஒன்றிணைந்து ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.

**சாதி பாகுபாட்டு முறை**

- சாதி பாகுபாட்டு முறை என்பது சொந்த சாதியை உயர்வானதாகக் கருதுவதாகும்.
- இந்திய சமூக அமைப்பு, சாதி முறையை அடிப்படையாகக் கொண்டது.
- சாதி முறை சமூக மதிப்பீட்டினையும், சமூக பிரிவினையும் ஏற்படுத்தி சமுதாயத்தில் வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமூக ஒற்றுமையை சீர்குலைக்கின்றன.

- பிறப்பால் அனைவம் சமம். சாதிய முறை மக்கள் மனதில் உயர்வு மனப்பான்மையும், தாழ்வு மனப்பான்மையையும் ஏற்படுத்துகின்றன.
- உயர் வகுப்பைச் சார்ந்த மக்கள் தாழ்ந்த வகுப்பைச் சார்ந்த மக்களிடம் தொடர்பு கொள்ளவோ, கலந்து கொள்ளவோ தயக்கம் காட்டுகின்றனர். இந்த உணர்வு மக்களாட்சி அமைதியாக செயல்படவும் தேசிய ஒற்றுமை வளரவும் தடையாக உள்ளது.

**தேசிய ஒருமைப்பாடு**

- புவியியல் அமைப்பு, அதனையெட்டிய மக்களின் வாழ்க்கை முறை, பலதரப்பட்ட பழக்கங்கள், சமய நம்பிக்கைகள், மொழி, உணவு, உடைகள் போன்றவற்றால் மக்கள் வேறுபடுகின்றனர், இருப்பினும், இந்தியாவின் பாரம்பரியத்தினால் ஒன்றுபடுகின்றனர்.
- மனிதா பினமானம், சமய உணர்வு, சகோதரத்துவம், நட்பு, அனைத்து மதத்தையும் சகித்துக் கொள்ளும் தன்மை போன்றவை இந்தியர்கள் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுடன் வாழ செய்கின்றன.
- அனைவரும் பாரதத் தாயின் பிள்ளைகள் என்ற எண்ணம் மற்றும் உணர்வு, இந்தியர்கள் அனைவரும் சகோதர,சகேதரிகள் என்ற எண்ணம் போன்றவை இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்க பெரிதும் உதவுகின்றன.

## 31. சமூகப் பொருளாதார பிரச்சனைகள்

- இந்தியா சுதந்திரம் பெற்ற நாள் முதல் பல்வேறு சமூக பிரச்சனைகளை சந்தித்து வருகிறது. அவைகளில் முக்கியமானவை எழுத்தறிவின்மை, குழந்தைத் தொழிலாளர் பிரச்சனைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான அசீதி போன்றவைகளாகும்.

**எழுத்தறிவின்மை**

- எழுதவோ, படிக்கவோ இயலாத நிலை - எழுத்தறிவின்மை எனப்படும். எழுத்தறிவின்மை மக்களை அறியாமைக்கு அழைத்துச் செல்கிறது. எழுத்தறிவு அளவு மற்றும் கல்வி வளர்ச்சி நாட்டின் வளர்ச்சியை நிர்ணயம் செய்யும் காரணிகளாகும்.
- எழுத்தறிவின்மையால் நாட்டின் பொருளாதார வளரச்சி தடைபடுவதோடு மட்டுமல்லாது, அரசியல் மற்றும் சமூக பொருயாதார பிரச்சனைகளையும் உருவாக்குகிறது.
- எழுத்தறிவின்மை குழந்தைத் தொழிலாளர் பிரச்சனைகளை, பெண் சிகக் கொலை மற்றும் மக்கள்தொகை பெருக்கத்திற்கு காரணமாக அமைகிறது.

எனவே எழுத்தறிவின்மை நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தடைக்கல்லாக அமைகிறது.

**எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள்**

- இந்திய அரசியல் அமைப்பு, மக்களுக்கு கல்வி அளிப்பதை அடிப்படை உரிமையாக உத்தரவாதம் செய்கிறது.
- 1948- 1949 - ஆம் ஆண்டு பல்கலைக் கழக மானியக்குழு தாய்மொழி மூலம் கல்வி கற்பது எழுத்தறிவு அளவினை உயர்த்தும் எனக் கூறியுள்ளது.
- 1968 - ஆம் ஆண்டு கல்விக் கொள்கை நாடு முழுவதும் ஒரே மாதிரியான கல்வி முறையை (10+2+3) அறிமுகப்படுத்தி உள்ளது.
- 1986 - ஆம் ஆண்டில் தேசிய கல்விக் கொள்கை, ஆரம்பக் கல்வியை கட்டாயமாக்கியது, மேலும் முறைசாராக் கல்வி முறையை அறிமுகப்படுத்தி மாணவர்கள் சீராக கல்வி பயில வழவகுத்தது.
- 1992 - ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கை "கரும்பலகைத் திட்டம்" மூலம் பள்ளிகளுக்கு அடிப்படை வநதிகள் செய்து தர வழிவகை செய்தது.
- 1991 - ஆம் ஆண்டு பேராசிரியர் தாவே அறிமுகப்படுத்திய குறைந்தபட்ச கற்றல் அளவு (MLL) மூலம் ஆரம்பப் பள்ளிக் கல்வி வளர்ச்சி அடைந்துள்ளது.
- தேசிய எழுத்தறிவு குழு, வயது வந்தோர் கல்விக்கு முக்கியகத்துவம் அளித்தது. அனைவருக்கும் கல்வி இயக்க (SSA) திட்டத்தின் மூலம் ஆரம்பக் கல்வியை உலகளாவிய அளவில் மேம்படுத்த சமுதாயத்தின் ஒத்துழைப்போடு முயற்சிகள் எடுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

**எழுத்தறிவின்மையை ஒழிக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்**

- பள்ளிக்கு செல்லக்கூடிய வயதில், அனைத்து குழந்தைகளும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும். சர்வ சிக் ஷா அபியான் திட்டத்தைன்படி, அனைத்து குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வி வழங்கப்பட வேண்டும்.
- ஆண் - பெண் எழுத்தறிவு மற்றும் சமூக இடைவேளி குறைக்கப்பட வேண்டும்.
- மக்கள்தொகை 300 -க்கு மேல் உள்ள ஊர்களில் ஆரம்ப பாடசாலை உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு "அனைவருக்கும் கல்வி" என்ற வழங்கும் நோக்கோடு கொண்டுவரப்பட்டுள்ள அனைவருக்கும் கல்வி என்ற திட்டம் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.
- 2001 கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் எழுத்தறிவு சதவிகிதம் 73.5 ஆகும். ஆண் சதவிகிதம் 82.4. பெண் சதவிகிதம் 64.4.
- 2011 கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் எழுத்தறிவு சதவிகிதம் 80.33 ஆகும். ஆண் சதவிகிதம் 86.81. பெண் சதவிகிதம் 73.86.

- ஐக்கிய நாடுகள் சபை 1990 - ஆம் ஆண்டினை பன்னாட்டு எழுத்தறிவு வருடமாகவும்,செப்டம்பர் 8 - ஆம் தேதியை உலக எழுத்தறிவு தினமாகவும் அறிவித்துள்ளது.

**குழந்தைத் தொழிலாளர் பிரச்சனைகள்**

- தொழிற்சாலைகளில் பணிபுரியும் 14 வயதிற்கு உட்பட்டவர்கள் குழந்தைத் தொழிலாளர்கள் ஆவார்கள். உலகிலேயே இந்தியாவில் தான் அதிக குழந்தைத் தொழிராளர்கள் உள்ளனர். இந்தியாவில் 1991 - ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 11.29 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். இது இந்திய மக்கள்தொகையில் 1.34 சதவிகிதமாகும்.

**குழந்தைத் தொழிலாளர் உருவாகக் காரணங்கள்**

- இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர் பிரச்சனை என்பது ஒரு சமூகப் பிரச்சனை, குழந்தைகளுக்கு முறையான உணவு, உடை, கல்வி, இருப்பிடம் போன்றவைகள் கிடைக்காததால் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகிறார்கள். ஆரம்ப காலத்தில் இவர்கள் கடைகள், உயவகங்கள் மற்றும் தொழிற்கூடங்களில் சிறு சிறு பணிகளை செய்து வருகின்றனர். இது வறுமை, கல்வியறிவின்மை போன்றவை தோன்ற வழி வகுக்கிறது.

**குழந்தைத் தொழிலாளர்கள் முறை ஒழிக்கப்பட அரசு எடுத்துள்ள நவடிக்கைகள்**

- 1949 - ஆம் ஆண்டு குழந்தைகள் பணி சட்டத்தின்படி, குழந்தைகள் பணிபுரிய 14 வயது நிரம்பியிருக்க வேண்டும் என்றும், பின்னர் இது 17 வயதாகவும் உயர்த்தப்பட்டது.
- 1951 - ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்படி, 12 வயதிற்குட்பட்ட குழந்தைகள் தோட்டத் தொழிலில் அமர்த்தப்படுவது தடை செய்யப்பட்டது.
- 1986 - ஆம் ஆண்டு குழந்தை தொழிலாளர் சட்டத்தின்படி தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும் பணிபுரிய 14 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும் என கூறப்பட்டது.
- 1987 - ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தேசிய குழந்தை தொழிலாளர் கொள்கையின்படி குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிக்கப்பட்டது. குழந்தை பணியாளர்களுக்கென பிரத்தியேக பள்ளிகள் உருவாக்கப்பட்டு தொழில் சார்ந்த வகுப்புகள் துவக்கப்பட்டன.
- இந்தியாவின் முன்னாள் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்களால் 1976 - ஆம் ஆண்டு கொத்தடிமை தொழிலாளர் முறையை ஒழிக்கச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

**பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்**

- பொருளாதார ஏற்றத்தாழ்வு என்பது சமுதாயத்தில் உள்ள மக்களிடையே செல்வத்தை சமமாக பங்கீடு செய்ய இயலாமையாகும். இது மக்கள்தொகை, கல்வியறிவின்மை, போதுமான இயற்கை வளமின்மை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏழை, பணக்காரரடகளிடையே காணப்படுகின்றது. இந்த ஏற்றத்தாழ்வு தேசிய ஒற்றுமை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை பாதிக்கின்றது.

**வட்டார ஏற்றத் தாழ்வுகள்**

- வட்டார ஏற்றத்தாழ்வுகள் என்பது பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களிடையே காணப்படும் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை குறிப்பதாகும். இந்தியாவில் பல தரப்பட்ட புவியியல் அமைப்புகள் காணப்படுகின்றன.
- நாட்டின் ஒரு பகுதி நன்கு வளர்ச்சி அடைந்து வருகிறது. ஆனால் மற்றொரு பகுதி நன்கு வளரமுடியவில்லை. எனவே வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், குறைவான வாழ்க்கைத்தரம், குறைவான தனிநபர் வருமானம் போன்றவை வட்டார ஏற்றத்தாழ்வுகளுக்கு காரணமாக அமைகிறது. இந்த வட்டார ஏற்றத்தாழ்வுகள் தேசிய ஒருமைப்பாட்டை பாதிக்கிள்றது.

**பொருளாதாரப் பிரச்சனைகள்**

- இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகும், ஏழ்மை ,வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு மற்றும் மக்கள்தொகை பெருக்கம் போன்ற பொருளாதாரப் பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகிறது.

**வறுமை**

- உலக வங்கியின் கூற்றுப்படி, வறுமை என்பது “குறைந்தபட்ச வாழ்வு நிலையை அடைய இல்லாத நிலைமை” ஆகும்.
- வறுமை ஒரு சமூகப் பிரச்சனை ஆகும். சமுதாயத்தில் ஒரு பிரிவினர் உணவு, உடை, இருப்பிடம் இன்றி அவதிப்பட்டு வருகின்றனர். மற்றொரு பிரிவினர் பொருளாதார வளத்தில் உள்ளனர்.
- மக்கள்தொகையில் 1/3 வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளனர். வறுமையினால் உடல் நலக்கேடும், மக்களின் திறமையும் பாதிக்கப்படுகின்றன. இதனால், நாட்டில் பொருயாதார வளர்ச்சியும் தேக்கம் அடைகிறது.

**வறுமைக்கான காரணங்கள்**

- மக்கள்தொகைப் பெருக்கம், மக்களின் குறைவான வருமானம், விலைவாசி உயர்வு மக்களிடையே நிலவி வருகின்ற வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் எழுத்தறிவின்மையும் வறுமைக்கான காரணங்களாகும்.

**வறுமையை ஒழிக்க வழிமுறைகள்**

- அரசாங்கம், வறுமையை ஒழிக்க, வறுமை ஒழிப்புத் திட்டத்தினையும், ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் வறுமையை ஒழிக்க பல்வேறு திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது.
- முதலாவதாக ஐந்தாண்டு (1951 - 1956) சட்டத்தின்படி விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளித்து உணவுப் பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- நான்காவது ஐந்தாண்டு திட்டத்தின் (1969 - 1974) மூலம் மக்களின் வாழ்நிலையை உயர்த்தவும், பொருட்களின் விலையை குறைக்கவும் முயற்சிகள் றேகொள்ளப்பட்டன.
- ஐந்தாவது ஐந்தாண்டு (1974 - 1979) திட்டத்தின்படி, வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- ஏழாவது ஐந்தாண்டு (1985 - 1990) திட்டத்தின்படி உணவு உற்பத்தியில் சுயசார்பு நிலையை உருவாக்கி, வறுமையை ஒழிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின்படி, மக்களின் தனிநபர் வருமானத்தை இரட்டியாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- இந்திய அரசாங்கம் ஜவஹர் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின் மூலம் வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பை வழங்கி, வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- முன்னாள் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட 20 அம்ச திட்டத்தின்படி கிராமபுரத்தில் வறுமையை ஒழித்து சமுதாயத்தின் அடிதட்டு மக்களை பொருளாதாரத்திலும், சமுதாயத்திலும் உயர்த்தி சமூக நீதி கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

**வேலையில்லாத் திண்டாட்டம்**

- வேலையில்லாத் திண்டாட்டம் என்பது பணிபுரிய விருப்பமும், உடல்தகுதியும் இருந்தும், வேலை கிடைக்காமல் இருப்பதைக் குறிக்கிறது.

**வேலையில்லாத் திண்டாட்டத்திற்கான காரணங்கள்**

விவசாய நாடான இந்தியாவில், விவசாயம் சார்ந்த வேலை வாய்ப்புகள் குறைந்த அளவிலேயே உள்ளன. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப

வளர்ச்சியினால், விவசாயத்திற்கான மனித சக்தி வெகுவாக குறைந்துள்ளது. மக்கள்தொகை பெருக்கம் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முக்கிய காரணமாகும்.

**வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்**

- இந்திய அரசாங்கம் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின்படி (NREP) (1980) மக்களுக்கு அதிகபட்ச வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகுத்தது.
- 1983 - ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட கிராமப்புற வேலைவாய்ப்பு உத்திரவாதத்தில் திட்டம் (RLEG) வருடத்திற்கு குறைந்தபட்சம் 100 நாட்களுக்கு, நிலமற்ற குடும்பங்களில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு வழங்க வழி வகுத்தது.
- 1979 - ஆம் ஆண்டு அரசு கொண்டு வந்த கிராமப்புற இளைஞர் வேலைவாய்ப்பு திட்டத்தின்படி, இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கி சுயவேலை வாய்ப்பிற்கு வழி வகுத்தது.
- 1989 - ஆம் ஆண்டு அரசு கொண்டு வந்த ஜவஹர் ரோஜ்கர் யோஜனா (JRY) என்ற திட்டம் கிராமப்புற மக்களுக்கு கிராம பஞ்சாயத்தின் மூலம் நிதி உதவி வழங்கி அவர்களின் நல்வாழ்விற்கு வகை செய்தது.

**விலைவாசி உயர்வு**

- அத்தியாவசிய பொருள்களின் உற்பத்தி மற்றும் தேவை, அப்பொருளின் விலையை நிர்ணயம் செய்கிறது. உற்பத்தி குறைவாகவும், தேவை அதிகமாகவும் இருந்தால் விலை உயர்வு ஏற்படுகிறது.

**விலைவாசி உயர்வுக்கான காரணங்கள்**

- மக்கள்தொகை பெருக்கமும், பொருள்களின் உற்பத்தி குறைவாக இருப்பதும், விலை உயர்வுக்கு காரணங்களாகும்.
- பருவமழை தவறுவதால் விவசாயப் பொருள்கள் பற்றாக்குறை ஏற்படுகிறது. மேலும் உணவுப் பாதுக்கலும் மற்றும் கள்ள வியபாரம் செய்வதும் விலை உயர்வுக்கு காரணங்களாகும்.

**விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்**

- அரசாங்கம், பொது விநியோக முறையின் (PDS) மூலம் மக்களுக்குத் தேவையான பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

- பொருட்களை பதுக்குபவர்களுக்கு எதிராகவும், கள்ள வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.
- கூட்டுறவு பண்டகசாலை மூலமாகவும் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

**மக்கள்தொகை**

- எதிர்பாராத விதமாக ஏற்படும் மக்கள் தொகை வளர்ச்சியே மக்கள்தொகை பெருக்கம் என்று அழைக்கப்படுகிறது.
- இந்தியாவில் உள்ள மிகப் பெரிய பிரச்சனை மக்கள்தொகை பெருக்கம் ஆகும். உலக நாடுகளில் மக்கள்தொகை அடிப்படையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. 24 சதவிகித நிலப்பரப்பளவை கொண்டுள்ளது.இந்தியா உலக மக்கள்தொகையில் 16.84 சதவிகிதம் பெற்றுள்ளது.

**மக்கள்தொகை பெருக்கத்திற்கான காரணங்கள்**

- மக்களின் பிறப்பு விகிதம் அதிகமாகவும், இறப்பு விகிதம் குறைந்துள்ளது
- மருத்துவம், அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றத்தினால் இறப்பு விகிதம் குறைவாக உள்ளது.
- நாட்டில் தொற்றுநோய் மற்றும் கொள்ளை நோய் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டன.
- சிசு மரணம் அதிக குழந்தைகள் பிறந்தால், அதிக வருமானம் கிடைக்கும் என்று எண்ணுவதாலும், ஆண் குழந்தை கட்டாயம் வேண்டும் என்று கருதுவதாலும் மக்கள்தொகை பெருக்கம் ஏற்படுகிறது.

**விளைவுகள்**

- மக்கள்தொகை பெருக்கம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வெகுவாக பாதிக்கிறது.
- வறுமை, விலை ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பல்வேறு சமுதாயப் பிரச்சனைகளை உருவாக்குகிறது.
- மக்கள்தொகை பெருக்கம், சுற்றுச்சூழல் பாதிப்பையும், சுகாதார சீர்கேட்டையும் உருவாக்குகிறது.
- ஆண்டுதோறும் ஜீலை, 11 - ஆம் நாள் உலக மக்கள்தொகை நாளாக பின்பற்றப்படுகிறது.

**மக்கள்தொகையை கடப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்**

- அரசாங்கம் குடும்ப கட்டுப்பாடு முறையை மக்களிடையே பரப்பி வருகிறது.
- பெண் கல்வியை ஊக்குவித்து, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.
- பலதார முறை மற்றும் பால்ய விவாகத்தை தடை செய்து சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுத்துள்ளது.
- இரு குழந்தைகளைப் பெற்று, சிறு குடும்ப வாழ்வு நடத்துபவர்களுக்கு, அரசு ஊக்கத் தொகை வழங்கி ஆதரிக்கிறது.
- திருமணம்,பிறப்பு மற்றும் இறப்பு ஆகியவற்றை முறையாக பதிவு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.
- இந்தியா சுதந்திரம் பெற்ற பின் அரசாங்காத்தின் முயற்சியினால், மக்கள் சமூக, பொருளாதார பின்னடைவில் இருந்து மேன்மையுற்றிருக்கிறார்கள்.
- நாட்டில் உள்ள அனைத்து பிரச்சனைகளுக்கும் முறையாக தீர்க்கப்பட வேண்டுமெனில், மக்கள் அனைவருக்கும் முறையான கல்வி கிடைக்க வழிவகை செய்திட வேண்டும்.

## 32. குழந்தைகள், பெண்கள் சட்டங்கள்

- இந்திய நாடு மக்கள் நல நாடாகும். நமது அரசு அனைத்துக் குடிமக்களின் நலனுக்காக குறிப்பாக, குழந்தைகள், பெண்கள் நலனில் சிறப்பு அக்கறை கொண்டுள்ளது.

**பெண்கள், குழந்தைகளுக்கான அமைச்சரகம்**

- குழந்தைகள், பெண்களின் முழுமையான வளர்ச்சி, பாதுகப்பு, வளமான வாழ்கை வாழ்தல் அவர்களின் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கி முழு குடிமக்களான வாழச் செய்யும் நோக்கத்துடன் செயல்படுகிறது.

**கல்வி உரிமை**

- கோபாலகிருஷ்ண கோகலே, குழந்தைகளின் கல்வி உரிமையின் முக்கியத்துவத்தை ஆங்கிலேயர் காலத்திலேயே, சட்டசபையில் எடுத்துரைத்து, அதனை பெறுவதற்காக அரும்பாடுபட்டார். அவரின் கனவு 2010, ஏப்ரல் 1 - ஆம் நாள் கொண்டு வரப்பட்ட கல்வி உரிமைச் சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- 6 முதல் 14 வயது முடிய உள்ள குழந்தைகளுக்கு கல்வி ஓர் அடிப்படை உரிமையாக ஆக்கப்பட்டுள்ளது.

**இந்திய அரசால் நிறைவேற்றப்ட்ட சட்டங்கள்**

- 1986 இல் நிறைவேற்றப்பட்டு, 2000 இல் மாற்றியமைத்து நடைமுறைபடுத்திய இளம் குற்றவாளிகள் நீதிச் சட்டம்,
- தாய்ப்பாலுக்கு மாற்றாக, உணவுப்புட்டிகள் மற்றும் குழந்தை உணவு திட்டம் - 1992.
- குழந்தை உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பாணைக்குழு சட்டம் 2005.

**குழந்தைகளின் நரனுக்கான சட்டங்கள்**

- இந்திய அரசியல் அமைப்பின் நெறிக்காட்டும் வழிமுறைகளில் சரத்து எண். 39(f) மற்றும் 45 ஆகியன குழந்தைகள் பாதுகாப்பையும், வளர்ச்சியையும் பற்றிக் கூறுகிறது.
- சரத்து 24, குழந்தைகளின் அடிப்படை உரிமைகளைப் பற்றியது ஆகும்.இது குழந்தைத் தொழிலாளர் முறையிலிருந்து அவர்களைப் பாதுகாக்க உறுதிச் செய்கிறது.14 வயதிற்குட்பட்ட எந்தக் குழந்தையும் ஆலைகளில் வேலை செய்யவும். சுரங்கங்கள் மற்றும் அபாயமான தொழில்கள் செய்வதையும் தடை செய்கிறது.
- சரத்து 39(f) குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி, குழந்தைகள் மற்றும் இளையோர் மீது போதிய கவனத்துடன் செயல்படுதல், சுரண்டலிலிருந்து பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு வழிவகுக்கிறது.
- சரத்து 45, பதினான்கு வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக்கல்வி அளிக்க வழிவகுக்கிறது.

**குழந்தைகளுக்கான நலத்திட்டங்கள்**

- குழந்தைகள் முன்னேற்றம் மற்றும் நலனுக்காக மிகுதியான நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிதிட்டம் (ICDS) - 1975 நோக்கங்கள்**

- 6 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களின் உடல்நலத்தைப் பாதுகாத்தல்.
- குழந்தை இறப்பு வகிதம், சத்துணவு குறைவு, பள்ளி இடைநிற்றல் போன்றவற்றின் விழுக்காடுகளைக் குறைத்தல்.
- பணிக்குச் செல்லும் தாய்மார்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் பேணி வளர்க்கும் ராஜீவ் காந்தி குழந்தைக் காப்பக திட்டம் 2006 இல் கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் வேலைக்குச் செல்லும் தாய்மார்களின், 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்காக, குழந்தைகள் காப்பபத்தை ஏற்படுத்தி நடத்தி வருகின்றது.

**வீதிகளில் வாழும் குழந்தைகளுக்கானத் திட்டம்** :

- வதீகளில் ஆதரவின்றி திரியும் குழந்தைகளுக்கு உறைவிடம், ஊட்டச்சத்து, உடல்நலம் பேணல், கல்வி மற்றும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்த வழி செய்தல் போன்ற ஒருங்கிணைப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
- குழந்தைகளைத் தவறாக பயன்படுத்துவதிலிருந்தும், சுரண்டலிலிருந்தும் இத்திட்டம் பாதுகாக்கிறது.

**குழந்தை உதவி மையங்கள்**

- இது பிரச்சனைகளிலிருக்கின்ற குழந்தைகளுக்கும், அவசரக் காலத்திலும் உதவி செய்கின்றன.
- குழந்தைகளின் உடல்நலன்,பாதுகாப்பு ஆகியவற்றிலும் சிறப்பு கவனத்தை செலுத்துகின்றன.

**ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு அமைப்பு**

- இது, நிறுவனம் சார்ந்த மற்றும் அமைப்புச்சாரா குழந்தைகளுக்கு பாதுகாப்பு கிடைக்க உதவுகிறது.

**வேலைச் செல்லும் குழந்தைகளுக்கான கவனிப்பும், பாதுகாப்பும் 2005**

- முறைச்சாராக் கல்வியும், தொழிற்கல்வியும், தொடர்கல்வியும், வேலைக்குச் சென்ற குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

**குழந்தைகள் தினம் கடைப்பிடித்தல்**

- ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 14 - ஆம் நாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. அது அரசுக்கும், தன்னார்வ நிறுவனங்களும், குழந்தைகளின் வளர்ச்சித் திட்டங்களை திரும்பிப் பார்க்க வாய்ப்பளிக்கிறது மேலும் பல்வேறுத் துறைகளிர் அவர் முன்னேற ஊக்கம் அளிக்கின்றது.

**அரசின் விருதுகள்**

- குழந்தைகளுக்கான கலை, இலக்கியம், காலாச்சாரம், விளையாட்டு ஆகிய துறைகளில் முதன்மை பெற்று தனித்திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு அரசு முறையான ஏற்பு தந்து பல்வேறு விருதுகளை அளித்து வருகிறது.
- 1996 இல் முதன்மையான குழந்தைகளுக்கான தேசிய விருது ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொர் ஆண்டும் குடியரசு தினத்தன்று 4 முதல் 15

வயதிற்குட்பட்ட, பாராட்டுக்குரிய குழந்தைகள், சிறப்பு விருதுகளினால் கௌரவிக்கப்படுகிறார்கள்.

- குழந்தைகளுக்கு பல்வேறு சட்டங்களை உருவாக்கினாலும் குழந்தைகளுக்கு நடைபெறுகின்ற கொடுமைகள் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு உருவாக்கப்பட வேண்டும்.
- வழிகாட்டுதலையும், நெறிப்படுத்துதலையும், அணுகக் கூடிய வகையில் அவர்களை உருவாக்க வேண்டும்.
- குழந்தைகளுக்கு நடைபெறுகின்ற பல்வேறு கொடுமைகள், தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றை நீக்க பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமுதாய நல நிறுவனங்கள் ஆகியவைகள் அரசுடன் ஒத்துமைக்க வேண்டும்.

**பெண்கள் முன்னேற்றமும், சட்டங்களும்**

- பழங்காலத்திலிருந்தே, பெண்களின் நிலை மாறுபட்டே இருந்து வருகிறது. சில காலங்களில் பெண்கள் மிக உயர்வாகக் கருதப்பட்டதும், சில காலங்களில் துன்பங்கள் அனுபவித்ததும் வரலாற்று உண்மைகளாகும்.
- சமூகத்தில் பெண்கள் நிலையை உயர்த்த இந்திய அரசு எண்ணற்ற உரிமைகளையும், சட்டங்கயையும் நடைமுறைபடுத்தியுள்ளது.

**பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்**

- பெண்களைப் பாதுகாக்க, கல்வி அளிக்க, வாழ்வாதாரங்களை உயர்த்த, எண்ணற்ற பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**வேலைக்கானப் பயிற்சித் திட்டம் பணி மற்றும் பயிற்தி ஆதாரத்திட்டம்**

- இத்திட்டம் 1996இல் ஆரம்பிக்கப்பட்டது. இது கை வேலைப்பாடுகள், கைத்தறிகள், காதி போன்ற கிராமத் தொழிற்சாலைகளில் வேலை வழங்க பெண்களுக்குப் பயிற்சி அளிக்கிறது.

**சுயவம்சத் திட்டம், சுயம்ஸிதா: (சுயமுயற்சி).**

- சமூக, பொருளாதார, மன அழுத்தம் போன்ற பிரச்சரனைகளில் துன்பப்படுகின்ற பெண்களுக்கு ஆற்றப்படுவத்தும் இடமாக இது உள்ளது.

**குடும்ப ஆலோசனை மையங்கள்**

- குடும்பங்களில் ஒத்துப்போக முடியாத சூழலினாலும், சமூக ஆக்கிரமிப்புகளாலும் பாதிக்கப்பட்டப் பெண்களுக்கு அறிவுரை வழங்கும் மையமாக இவைச் செயல்படுகின்றன.

**பெண் கல்வித் திட்டங்கள்**

- பல்வேறு காரணங்களினால் பள்ளிப்படிப்பை தொடர முடியாத 15 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் கல்வி கற்கவும், திறன்களை வளர்க்கவும் வழி செய்கிறது. இதன்மூலம் வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. இது பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்.

**கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்கள்**

- பெண்கள் தங்களின் உரிமைகளையும், வாய்ப்புகளையும் தெரிந்து கொள்ளாததால் எண்ணற்றப் பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இத்திட்டம் ஏழைப் பெண்களிடம் விழிப்புணர்வை உருவாக்கி அவர்கள் தங்கள் நிலைகளையும், உரிமைகளையும் தெரிந்து பல பிரச்சனைகளைத் தீர்க்க உதவுகிறது.
- பெண்களின் சமூக வாழ்க்கை உயர்வு அரசின் சட்ட திட்டங்களில் மட்டுமல்ல, ஏராளமான சமூக நல அமைப்புகளின் முயற்சியாலும் முன்னேற்றம் கண்டுள்ளது. இவைகளின் உதவியோடு எதிர்காலத்தில் பெண்கள் நிலை மேலும் உயர்வடையும் என உறுதியாகக் கூறலாம்.

**பெண்களுக்கு எதிரான அநீதிகள்**

- இந்திய நாட்டின் மக்கள்தொகையில், பெண்கள் சரிபாதியாக இருந்தபோதிலும், சமுதாயத்தில் ஆண்களுக்குச் சமமாக நடத்தப்படுவதில்லை.
- ஆண் ஆதிக்கம், உடன்கட்டை ஏறும் வழக்கம், விதவை முறை, பெண் சிசுக்கொலை, வரதட்சணை முறை, முறையான கல்வி மறுப்பு போன்றவைகள் பெண்களுக்கு எதிரான அநீதிகளாகும்.

**பெண்களின் நிலை உயர அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்**

- 1829 - ஆம் ஆண்டு சட்டத்தின்படி உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒழிக்கப்பட்டது.
- 1856 - ஆம் ஆண்டு விதவைகள் மறுமணச் சட்டம் இயற்றப்பட்டது.
- 1967 - ஆம் ஆண்டின் சம ஊதிய சட்டத்தில், சம பணிக்கு சம ஊதியம் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.
- பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க பயிற்சி அளித்து நல்வாழ்வு வாழ அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது. (STEP)
- தொட்டில் குழந்தை திட்டம் (1992) பெண் குழந்தைகளை சிசு கொலையில் இருந்து பாதுகாக்கிறது. மேலும் தமிழ்நாடு முழுவதும் அனைத்து பெண்கள்

காவல் நிலையங்களை உருவாக்கி, பெண்களின் உரிமைகளை தமிழக அரசு பாதுகாத்து வருகிறது.

- 1978 - ஆம் ஆண்டை, ஐ.நா. சபை உலக பெண்கள் ஆண்டாக அறிவித்துள்ளது.

**மகளிர் குலத் திலகம் டாக்டர் முத்துலெட்சுமி**

- 1886 - ஆம் ஆண்டு ஜீலைத் திங்கள் 30 ஆம் நாள், புதுக்கோட்டை சிற்றரசில் பிறந்தார். அவர் படிக்கும்போதே சிறப்புற்று விளங்கினார். விளையும் பயிர் முளையிலேயே என்பதற்கிணங்க, புத்தி கூர்மையுடன், எதையும் பகுத்தறிந்து உண்மை அறியும் ஆர்வம் கொண்டிருந்தார்.
- அவரது சமூகப் பழக்கத்தின்படி பள்ளிக்குச் சென்று படிப்பது தடுக்கப்பட்ட காலத்தில் வீட்டுலேயே தனி ஆசிரியர்களிடம் படித்தும் பள்ளி இறுதித் தேர்வு எழுதி வெற்றி பெற்றார்.
- ஆண்கள் மட்டுமே படித்த புதுக்கோட்டை கல்லூரியில் முதன் முதல் இடம்பெற்ற ஒரே மாணவி அவர்.
- சென்னை மருத்துவக் கல்லூரியில் 1912 - ஆம் ஆண்டில் மருத்துவராகப் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி அவர்.
- அக்கால ஆங்கிலேய அரசில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் இடம்பெற்ற, சென்னைச் சட்டமன்றத்தில் நியமிக்கப்பெற்ற முதல் பெண்மணியாகவும், பின்னர் அந்த மன்றத்தின் துணைத் தலைவராகவும் விளங்கிச் சிறப்பாகக் கடமையாற்றினார்.
- ஆடவரைப் போன்றே மகளிருக்கும் வாக்குரிமையும், சொத்துரிமையும் அளிக்க வேண்டும் என்று கேட்டவர்.
- அகில இந்திய மகளிர் மன்றத்தில் முதல் தலைவராகவும், சென்னை நகராட்சியின் முதல் அதிகாரியாகவும் அவர் தேர்வு செய்யப்பட்டுப் பலரும் பாராட்டுமாறு பணி செய்தார்.
- சமுதாயத்தில், பெண்கள் தலைமுறை தலைமுறையாகப் பல கொடுமைகளுக்கு ஆளாவதைக் கண்டு வேதனையடைந்த அவர், மகளிர் பெண்கள் கல்வி கற்கும் உரிமை, பெண்களுக்கு ஆண்களைப் போன்று வாழும் சமத்துவ உரிமை, பெண்களுக்கு ஆண்களைப் போன்று வாழும் சமத்துவ உரிமை, பெண்களுக்குச் சுதந்திரமான வாழ்வு, பெண் குழந்தைகளைக் காத்தல், பெண்கள் முன்னேற்றத்திற்கு வழி செய்தல் ஆகிய பல நோக்கங்களுக்காகவும் பாடுபட்டார்.
- கொடிய புற்றுநோயால் துன்புற்று மடியும் மகளில் வேதரனையைத் துடைக்க, லண்டனில் இருந்த ராயல் புற்றுநோய் மருத்துவமனைக்கு சென்று அங்கு வழங்கும் சிகிச்சை முறையைப் பயின்று வந்து, சென்னை, அடையாறில் ஒரு புற்றுநோய் மருத்துவமனையைத் துவங்கி, அதன்மூலம் மகளிர் குலத்துக்கு

அரும்பணி ஆற்றினார். இன்றும் அந்த மருத்துவமனை பெரும் வளர்ச்சியுற்று, அவரது பேரும், புகழும் விளங்கச் செயற்படுகிறது.

- விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட மகளிர் ஆகியோர் நலன் காத்திடுவதற்கென்று, தாம்பரத்தில் அரசு உதவியுடன் மகளிர் புனர்வாழ்வு இல்லம் ஒன்றைத் துவக்க வழிசெய்தார்.
- நாட்டில் சிறுவயதிலேயே பெண்குழந்தைகட்குத் திருமணம் செய்யும் தீமை பரவலாக நடைபெற்றதால், அதைத் தடுத்திடுவதற்கு வழிசெய்திட அரசுக்கு எடுத்துக்கூறி, சிறுவயதினர் திருமணத் தடைச் சட்டம் கொண்டுவரச் செய்தார்.
- அக்காலச் சமுதாயத்தில், இளம் பெண்களுக்குப் பொட்டு கட்டித் திருக்கோயில்களில் தேவதாசிகளாகத் தொண்டு செய்ய அனுப்பிவிடும் வழக்கம் தலைமுறை, தலைமுறையாக நிலவியதால், நாடெங்கும் ஆயிரக்கணக்கான பெண்கள் 'தேவதாசி' என்னும் பெயரில், சீர்குலைந்த வாழ்வுக்கு ஆளாக்கப்பட்டனர். தேவதாசியாவது தெய்வப் பணிக்காக என்னும் நம்பிக்கை இருந்தது. இதனால் பெரும் தீமைக்கு ஆளாகாமல் பெண்களைக் காத்திடுவதற்கு முனைந்து, சட்டமன்றத்தில் தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் கொண்டுவந்தார். அதை நிறைவேற்றவிடாமல் தடுக்க, மத வெறியர்களும், பழமைவாதிகளும் எதிர்த்து வாதாடினார்கள். அந்நிலையில் சுயமரியாதை இயக்கத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுடைய ஆதரவுடனும், வழிகாட்டுதலுடனும், சட்டமன்றத்தில் தொடர்ந்து வாதாடி தேவதாசி முறை ஒழிப்புச் சட்டத்தை அவர் நிறைவேற்ற வைத்தார்.
- பெரியார் ஈ.வெ.ரா. தமிழ்த் தென்றல் திரு.வி.க. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களும் இந்தச் சட்டத்தின் அவசியத்தை எடுத்துக்கூறி பொதுமக்களின் பேராதரவைத் திரட்ட வேண்டியிருந்தது.
- அம்மையார் தம் வாழ்நாளில் செய்த தொண்டுகள், சமூகநலப் பணிகள்: நாட்டில் ஆதரவற்றோருக்கான இல்லங்களைத் தொடங்கியதுடன், குடிசைவாழ் மக்களின் வறிய நிலைகண்டு, அவர்கட்கு மருத்துவ உதவியும், சுகாதார வாழ்வும் கிடைப்பதற்கும் வழிசெய்திட அதற்கு ஏற்ற நிறுவனங்களை உருவாக்கச் செய்து அவற்றின் மூலம் பணி செய்தார்.
- கைவிடப்பட்ட அபலைப் பெண்களைக் காத்திட 1930 - ஆம் ஆண்டில் அடையாற்றில் 'ஔவை இல்லம்' தொடங்கினார்.
- பெண்களுக்கு எட்டாம் வகுப்பு வரை இலவசக் கல்வி வழங்க வழி செய்தார்.
- டாக்டர் முத்துலெட்சுமி அவர்களுக்கு, மைய அரசு 1956 இல் 'பத்மபூஷன்' விருது வழங்கியது.
- அவர்தம் பேரும், புகழும் என்றும் ஒளிவிடுமாறு, அம்மையாரின் பெயரில் தாய் - சேய் நலன் காக்கும் நோக்குடன் கருவுற்ற தாய்மார்கட்கு நல்ல சத்துணவு கிடைத்திட வழிசெய்ய மகப்பேறுக்கு முன் மூன்று மாதத்திற்கும்,

பின் மூன்று மாதத்திற்குமாக, மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் ஆறாயிரம் ரூபாய் அரசே வழங்கும் நல்ல திட்டத்தை அறிவித்து நிறைவேற்றியது.

## 33. சமூக ஏற்றத்தாழ்வுகள்

அனைத்து நாடுகளிலும் சமூகப் பிரிவுகள் காணப்படுகின்றன. ஆனால் இந்தியாவின் சாதிமுறை விசித்திரமான ஒன்று. இங்கு சமூக அந்தஸ்து, பொறுப்புகள், சமூக மத உரிமைகள் மற்றும் வேலை வாய்ப்புகள் போன்றவை பிறப்பை ஒட்டியே தீர்மானிக்கப்படுகின்றன. இத்தகைய பிறப்பு சார்ந்த சமூக பிரிவுகளே, சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கும் மற்றும் சமூக அநீதிக்கும் வழிவகுக்கின்றன.

- சமூகத்தில் பெரும்பான்மையோர் கைவினைஞர்கள் போன்று உடலுழைப்பை மேற்கொண்டனர். இவர்கள் சூத்திரர்கள் மற்றும் பஞ்சமர்கள் என்று அழைக்கப்பட்டனர். கல்வி, அரசு வேலை வாய்ப்புகள், கோவில் உரிமைகள், சொத்து மற்றும் வழித்தடங்கள், குளங்கள் போன்றவை இம்மக்களுக்கு விலக்கப்பட்டிருந்தன. இத்தகைய நிலை சமூகத்தின் பெரும்பான்மையோரை, உயர்சாதி மக்கள் சுரண்டும் நிலைக்கு தள்ளியது.
- தமிழகத்தில் சங்க காலத்தில் சதுர்வர்ணா அடிப்படையிலான ஜாதிமுறை நடைமுறையில் இல்லை.
- களப்பிரர்கள் ஆட்சிக்குப்பின் பல்லவர்கள், சோழர்கள் மற்றும் பாண்டியர்கள் காலத்தில் பிராமணர்கள் சமூகத்தில் உயர்நிலை அடைந்தனர். அவர்கள் தங்களின் வேத யாகங்கள் மற்றும் சுமிருதிகள் மூலமாக, மன்னர்களை கவர்ந்தனர். படிப்படியாக அரச குடும்பத்தை வர்ண முறையை ஏற்றுக்கொள்ளச் செய்தனர்.
- பக்தி இயக்கத்தின் மூலமாக கோயில் முறை மிக முக்கிய சமூக, அரசியல் பொருளாதாரக் காரணியாக மாறியது. பிராமணர்கள் தங்களது "ஆகமங்களின்" மூலமாக செல்வம் கொழிக்கும் கோயில்களுக்கு பூசகர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டனர். ஏற்கனவே வேதங்கள் மற்றும் சுமிருதிகளில் தேர்ந்தவர்கள் என்ற முறையில், நிரந்தர வருவாய் தரும் செழிப்பான கிராமங்களை மானியங்களாகப் பெற்றனர். கோவில் முறை சார்ந்த கல்வி, உயர்ந்த பதவிகள், சொத்துரிமைகள் போன்றவை உழைக்கும் உழவர்கட்டும், கைவினைஞர்கட்டும் மறுக்கப்பட்டன. இவர்கள் சூத்திரர்கள் என்றும், நிலமற்ற கூலிகள் பஞ்சமர்கள் என்றும் சிறுமைப்படுத்தப்பட்டனர். இவ்வாறு தமிழ்நாட்டில், பெரும்பான்மையோர் உரிமைகள், சொத்துகள், கல்வி, பதவி மற்றும் சமூக அந்தஸ்து போன்றவற்றிலிருந்து விலக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான வருடங்கள் தொடர்ந்தால், இன்றைய காலத்தில் அவர்களது வெறுக்கத்தக்க பின்தங்கிய நிலமை உருவானது.

- சாதியின் ஒரு தீட்சியே தீண்டாமை ஆகும், சூத்திரர்களும் தீண்டாமையின் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர். இப்போதும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (தலித்) அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுபவர்களாய் தொடர்கிறார்கள். இதன் விளைவாக அவர்களுக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதோடு, கொடிய இழிவுகளுக்கும் ஆளாக்கப்படுகின்றன.
- பிராமணர்களின் ஏகபோக ஆதிக்கம், உயர்கல்வி, அரசு வேலை வாய்ப்புகள் பொது நிறுவனங்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகளில் காணப்பட்டதால், பிராமணரல்லாதவர்கள் ஒரு பிராமணரல்லாதோர் இயக்கத்தை ஆரம்பிக்க காரணமாக அமைந்தது.
- 1912 - ஆம் ஆண்டு, சி. நடேச முதலியார் ஒரு திராவிட விடுதியை பிராமணரல்லாத மாணவர்களுக்காக சென்னையில் நடத்தினார்.
- பி. தியாகராய செட்டி மற்றும் டாக்டர் டி.எம்.நாயர் போன்றோர் ஒரு சமூக அரசியல் இயக்கத்தை தென்னிந்திய நல உரிமை சங்கம்) நீதிக்கட்சி என்று மக்களால் அழைக்கப்பட்ட இயக்கத்தை உருவாக்கினர். இந்த இயக்கம் பிராமணர் அல்லாதவர்களுக்கு அரசியல் சட்ட ரீதியிலான பாதுகாப்பிற்காக செயல்பட்டது. இக்கட்சி இரட்டை ஆட்சி முறையின்படி சென்னை மாகாணத்தில் ஆட்சியைக் கைப்பற்றி, 16 ஆண்டுகள் ஆட்சி நடத்தியது. (1921 - 37)
- நீதிக்கட்சியின் ஆட்சிக் காலகட்டத்தில் "வகுப்பு உரிமை ஆணை" மூலம் அரசு வேலை வாய்ப்பில் அந்தந்த வகுப்புகளின் மக்கள்தொகைக்கேற்ப இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. "சமஸ்கிருதம் கட்டாயம்" என்ற பிரிவை நீக்குவது மூலம், பிராமணரல்லாதவர் மருத்துவ கல்லூரிகளில் சேருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.
- செல்வ வளமிக்க கோவில்களின் மீது இருந்த பிராமணரின் ஏகபோக ஆதிக்கம் இந்து சமய அறநிலைய மசோதா டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களது அயராத உழைப்பால் தேவதாசி முறை நீக்கப்பட்டது.
- இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பஞ்சமி நில சட்டத்தைப் பயன்படுத்தி, தாழ்த்தப்பட்ட சாதிகளுக்கு நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. நிலமற்ற வேலையாட்களின் நிலையை உயர்த்த மிரா சுதாரர் முறை ஒழிக்கப்பட்டது.
- முதன்முறையாக இந்தியாவில் சென்னை மாகாணத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- நீதிக்கட்சியின் ஆட்சிக்காலத்தில், சென்னை சிந்தாதிரிப்பேட்டை பள்ளியில் ஏழைக் குழந்தைகள் தொடர்ந்து கல்வி பெறுவதை ஊக்குவிப்பதற்காக மதிய உணவு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

- சென்னை மாநிலத்தில் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கவும், முறைப்படுத்தவும் தொழிற்பேட்டைகளை அறிமுகப்படுத்திய பெருமை நீதிக் கட்சியினரையேச் சாரும்.

**சாதி முறை**

- சாதி சீர்திருத்தங்கள் மற்றும் சாதியற்ற சமூக அமைப்பு, முற்போக்கான எந்த ஒரு சமூகமும் சாதி முறை மற்றும் அதன் பிற வடிவங்களையும் புறக்கணிப்பதாய் இருக்க வேண்டும்.
- சாதி முறையை சீர்படுத்த சில இயக்கங்கள் முன்வந்தன.
- மகாத்மா காந்தி உள்ளிட்ட சனாதன ஆதரவாளர்கள் தீண்டாமையை மட்டும் ஒழிக்க முற்பட்டனர். ஆனால் அவர்கள் வர்ண முறையை நியாயப்படுத்தினர்.
- தயானந்த சரஸ்வதி (ஆரிய சமாஜ்) சாதியை வெறுக்கின்ற அதே வேளையில், வர்ணத்தை நியாயப்படுத்தினார்.
- தமிழ்நாட்டில் சித்தர், இராமலிங்க வள்ளலார் மற்றும் வைகுந்தசாமி ஆகியோர் சாதி முறையை முற்றிலும் எதிர்த்தனர்.
- மகாராஷ்ராவில் மகாத்மா பூலே மற்றும் சாகு மகாராஜ், கேரளாவில் நாராயண குரு, தமிழ்நாட்டில் அயோத்தி தாச பண்டிதல் ஆகியோர் வர்ணத்தையும் சாதியையும் மறுத்தனர்.
- சென்னை மாகாணத்தில் இரட்டையாட்சி சட்டமன்றத்தில் பிராமணர் அல்லாதோருக்கு சில இடங்களை ஒதுக்கீடு செய்தது. முதல் நடவடிக்கையாகும். அரசுப் பணிகளில் விகிதாச்சார அடிப்படையில் அனைத்து சமூகப் பிரிவுகளுக்கும் இட ஒதுக்கீடு செய்வதை உறுதி செய்யும் வகுப்புவாரி அரசாணை என்பது மற்றொரு முக்கியமான நடவடிக்கையாகும்.
- கோயில் நுழைவு சட்டங்களுடன் சீர்திருத்தவாதிகள் மனநிறைவு அடையும் போது, சாதி முறையை எதிர்த்தவர்களோ, ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் அனைத்துத் துறைகளிலும் சமவாய்ப்புப் பெற உழைத்தனர்.
- சுதந்திரத்திற்கு பின், தமிழ்நாட்டில் கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்ட்ட சமுதாயத்திற்கு இட ஒதுக்கீடு செய்வதற்கு எதிராக பெறப்பட்ட நீதிமன்ற உத்தரவுகள், சமூக நீதிக்கு பெரிய சவாலாக அமைந்தன.பெரியார் ஈ.வே. ராமசாமி இந்த உத்தரவிற்கு எதிராக ஒரு மிகப்பெரிய போராட்டத்தை துவக்கினார். காங்கிரஸிசில் காமராஜ், தி.மு.க.வில் சி.என். அண்ணாதுரை ஆகியோர் பெரியாரின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக இருந்தனர்.
- இறுதியில் மாநில அரசுகள் இட ஒதுக்கீட்டு கொள்கையைப் பின்பற்றுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அரசியல் அமைப்பின் அடிப்படை உரிமைகள்

பிரிவில் திருத்தம் செய்யும் முதலாவது அரசியல் சட்டதிருத்த மசோதாவை பண்டித ஜவகர்லால் நேரு கொண்டு வந்தார்.

- தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள இடஒதுக்கீடு மிகவும் மேம்பட்டதாகவும், விரிவானதாகவும் உள்ளது. இதன்படி ஆதிதிராவிடருக்கு 18 சதவீதமும், பழங்குடியினருக்கு 1 சதவீதமும், மிகவும் பிற்படுத்தப்பட்டவருக்கு 20 சதவீதமும் மற்றும் பிற்படுத்தப்பட்டவருக்கு 30 சதவீதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அருந்ததியருக்கும், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கு உள் ஒதுக்கீடும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**தந்தை பெரியார்**

- ஈ.வே. ராமசாமி (ஈ.வே.ரா) சாதிமுறைக்கு எதிரான ஒரு தீவிரமான போராளி,
- 1924 இல் கேரளாவில் வைக்கம் என்னுமிடத்தில் சூத்திரர்கள். பஞ்சமர்கள் என்ற தாழ்த்தப்பட்ட மக்கள் பொது தெருவின் வழியாகச் செல்ல சமமான உரிமைப்பெற போராட்டம் நடத்தியபோது பெரியார் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார்.
- வ.வே.சு. அய்யரால் நடத்தப்பட்டு வந்த சேரன்மாதேவி குருகுலத்தில் வர்ணாசிரமம் பாகுபாடு, பின்பற்றப்படுவதை எதிர்த்தார்.
- தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற முறையில் அரசியல் மற்றும் ஆட்சித் துறைகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைத்திடப்போராடினார். அவரது சுயமரியாதை இயக்கம், சூத்திரர்கள் மற்றும் பஞ்சமர்களை சமூக பண்பாடு மற்றும் மத அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்தையும், பெண்கள் சரிநிகர் சமான நிலையை அடைவதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.
- திராவிடர்களை பிராமணிய ஆதிக்கத்தில் இருந்து விடுவித்து, இந்து வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் இவர்களை கொடுமையாகவும், ஏமாற்று வழிகளிலும் கட்டுப்படுத்தி வைத்திருப்பதை உணர வைப்பது என்ற நோக்கத்தையும் சுயமரியாதை இயக்கம் கொண்டிருந்தது. அவர் சாதி முறையை ஏற்க மறுத்ததுடன் சாதி மறுப்புத் திருமணங்களையும் ஊக்குவித்தார்.
- புரோகிதம் தவிர்ந்த சுயமரியாதைத் திருமண முறைகளையும் அறிமுகப்படுத்தினார். அவரே பல திருமணங்களையும் சடங்குகளின்றி நடத்தி வைத்தார். சமூக மாற்றத்தின் அடிப்படையாக பகுத்திறிவையும், மனிதாபிமானத்தையும் வலியுறுத்தினார்.
- அவர் குடியரசு, புரட்சி, விடுதலை என்ற தமிழ் இதழ்களையும், 'ரிவோல்ட்' என்ற ஆங்கில இதழையும் வெளியிட்டு தன்னுடைய கொள்கைகளை பரப்பினார்.

- ‘சாதி’ கொடுமையின் ஆணிவேர் என்பதற்காக மனுவின் சட்டங்களை சாடினார். கல்வி நிறுவனங்களில் ஒடுக்கப்பட்ட சாதியை சேர்ந்தவர்கள் இட ஒதுக்கீடு பெறவும், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் உரிமை கோரியும் அவர் நடத்திய போராட்டங்கள் புரட்சிகரமானவை.
- பெண்கள் உரிமைகளுக்காக அவர் நடத்திய போராட்டங்கள் அவருக்கு ‘பெரியார்’ என்ற பட்டத்தை பெற்று தந்தன.
- ஆழமான மக்களாட்சிக் கோட்பாடுகளைக் கொண்ட இந்திய அரசியலமைப்புச் சட்டம், சாதி முறையை அங்கீகரிக்கவில்லை. பாகுபாடுகளை அது தடை செய்கிறது.
- இந்தியாவின் மாபெரும் சிந்தனையாளர்கள் தலைவர்களான புத்தர், மஹாவீரர் முதல் மகாத்மா ஜோதிகா பூலே, இராமலிங்க வள்ளலார், பெரியார் மற்றும் டாக்டர் அம்பேத்கார் வரை அனைவரும் சாதியை கடிந்து சாதியற்ற சமூகத்தை உருவாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.
- இன்றைய முக்கியமான தேவை சமூகப் பிரிவுகளை நீக்குவதற்காக சாதி மறுப்பு மணம், சாதித் தடைகளை அகற்றுதல், மத - சமூக - பண்பாட்டு - பொருளாதாரப் பிற்பட்ட நிலைகளை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் உள்ளிட்ட சிறப்பு நடவடிக்கைகள் ஆகும்.
- கல்வி முறையான வாய்ப்பில்லாதவர்களை உயர்த்த முக்கியமான பங்கை வகிப்பது மட்டுமல்லாமல், பல்வேறு சமூக பிரிவுகளிடம் சமத்துவத்தை ஏற்படுத்தவும் உதவுகிறது.
- 19 - ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசு நிதியுதவித் திட்டம் கிராமங்களில் அதிகமான பள்ளிகளை ஏற்படுத்தியது.
- காமராசர் அரசால் அறிமுப்படுத்தப்பட்ட மதிய உணவுத் திட்டம் எம்.ஜி.ஆர் ஆட்சியில் சத்துணவுத் திட்டமாக மேம்பாடு அடைந்தது.
- கல்விக் கட்டணம் பட்டப்படிப்பு வரை ரத்து செய்யப்படுதல், முதல் தலைமுறை மாவர்களுக்கு சிறப்பு சலுகைகளுடன் பல்வேறுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ள பிரிவினரை மற்றவர்களுக்குச் சமமாக உயர்த்தும் சமநீதித் திட்டங்களில் ‘சமச்சீர் கல்வி’ முறையும் சிறப்பான இடத்தை பெறுகிறது.

**தீண்டாமை**

- இந்தியாவில் தீண்டாமை என்பது, அடிமைத்தனம் மற்றும் ‘இனவெறி’யை விட மேசாமானது.
- இந்தியாவில், பிரிட்டிஷார் வரும் வரை தீண்டத்தகாதவர்கள் இந்து சமூகத்தினரால் விலக்கி வைக்கப்பட்டவர்களாக இருந்தனர். அவர்கள் தீண்டத்தகாதவர்கள் மட்டுமல்ல, அவர்கள் பார்க்க தகாதவர்கள் மற்றும்

அண்டக் கூடாதவர்கள் என்றும் ஒதுக்கி வைக்கப்பட்டனர். அவர்களுக்கு படிக்கும் உரிமையில்லை. பொது வழிகள் மற்றும் குளம், குட்டைகளை உபயோகப்படுத்த உரிமையில்லை. கோயில்களுக்குச் செல்ல அனுமதியில்லை, இடத்தை வாங்க அனுமதியில்லை, அலுவலக பணிகளை செய்ய உரிமையில்லை அல்லது நீதிமன்றங்களில் நீதியை தேடிப்பெற வழியில்லை. பெண்களுக்கு மேலாடையை உடுத்த அனுமதியில்லை, அவர்கள் காலணி அணியக் கூடாது. அவர்கள் குடை பிடிக்கக்கூடாது மற்றும் அவர்கள் நாகரிகமான பெயர்களை வைத்துக்கொள்ளக் கூடாது என்று பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு இருந்தனர்.

- 20 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பஞ்சமர்கள் மற்றும் சூத்திரர்கள் பொதுப் போக்குவரத்து வாகனம் மற்றும் பொது சிற்றுண்டி சாலைகளை பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை. அவர்களை மனிதர்களாகக் கூட நடத்தவில்லை.
- காலனி ஆதிக்கத்தின் போது, குறிப்பாக 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி மற்றும் 20 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், இந்த மனிதத்தன்மையற்ற முறைக்கு எதிராக குரல்கள் எழுந்தன. கல்வி, வேலை, மத உரிமைகள், சமூக அந்தஸ்து மற்றும் பொருளாதார வாய்ப்புகள் வேண்டி இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் குரல்கள் எழுந்தன.
- 19 - ஆம் நூற்றாண்டில் தென் மாவட்டங்களில் நடைபெற்ற சாணார் கிளர்ச்சிக்கு பிறகு, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தலையீட்டால், தீண்டத்தகாதோர் உள்ளிட்ட கீழ்சாதி பெண்கள், 'மேலாடை' அணியும்
- நாடார்களின் கோயில் நுழையும் முயற்சிகள் மிகவும் கடுமையாக அடக்கப்பட்டன. பிரிட்டிஷ் அரசாங்கமும், கிறித்துவ பாதிரிமார்களும் தீண்டத்தகாதவர்களின் நிலைமை பற்றி மிகவும் கவலை அடைந்தனர். அவர்களின் பலர் கிறித்துவ மதத்தை தழுவினர். இத்தகைய பெரிய மத மாற்றம், இந்து தலைவர்களான தயானந்த சரஸ்வதி, ஜி. சுப்பிரமணிய ஐயர் மற்றும் மகாத்மா காந்தி போன்றோரின் கண்களை திறந்தது. அவர்கள் தீண்டாமையை ஒழிப்பதில் அக்கறை காட்டினர்.
- காந்தி அவர்களை இந்துக்களாக அங்கீகரித்து அவர்களுக்கு 'ஹரிஜன்கள்' (கடவுளின் குழந்தைகள்) என்று பெயரிட்டார். காந்தி 'ஹரிஜன்' என்ற இதழை நடத்தி, அவர்களை உயர்த்தும் திட்டங்கள் காங்கிரஸ் கட்சிக்குள் கொண்டு வந்தார்.
- தமிழ்நாட்டில் அயோத்திதாச பண்டிதர் புத்தமதத்தை தழுவுவதற்கு ஆதரவாக தன் கருத்துகளை தெரிவித்தார். எனினும் தமிழ்நாட்டில் பெரியாரும், இந்திய அளவில் பி.ஆர்.அம்பேத்கரும் ஆக்கபூர்வமாகச் செயல்பட்டு, பிற்படுத்தப்பட்ட

பிரிவினர் மற்ற பிரிவினருடன் சரிநிகர் சமானமாய் வாழ்வதற்காகப் பல மாற்றங்களைக் கொண்டு வந்தனர்.

- அம்பேத்கர் அவர்களின் முனைப்பால் தீண்டாமை, பொது இடங்களில் அனுமதி மறுக்கப்படுதல் மற்றும் கீழ்த்தரமாக நடத்தப்படுதல் போன்றவை அனைத்தும் குடியரசு அரசியலமைப்பு சட்டத்தில் குற்றங்களாக அறிவிக்கப்பட்டன.
- 1938 - ஆம் ஆண்டு, இராஜாஜி தலைமையில் அமைந்த காங்கிரஸ் அமைச்சரவை 'ஹரிஜன்கள்' இந்து கோயில்களுக்குள் நுழைய, கோயில் நுழைவுச் சட்டங்களை கொண்டு வந்தது. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் கோயிலுக்குள் நுழையும் உரிமைக்காக மதுரை வைத்தியநாத அய்யர் மற்றும் முத்துராமலிங்க தேவர் போன்றோர் தீவிரமாக செயல்பட்டனர்.
- 2006 - ஆம் கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு அர்ச்சகர் சட்டம், பிராமணரல்லாதவர் குறிப்பாக சூத்திரர்கள் மற்றும் பஞ்சமர்கள் கோயில்களில் அர்ச்சகராக வழிவகை செய்கிறது. சாதி முறை மற்றும் தீண்டாமையை இப்போதுள்ள அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் எந்தவித பாதுகாப்பும் இல்லை. கல்வி நிலையங்கள் மற்றும் அரசியல் நிருவாக அமைப்புகளில் உள்ள ஒதுக்கீட்டிற்கு அரசியலமைப்பு பாதுகாப்பு உண்டு. இம்மக்களை ஆரோக்கியமற்ற மற்றும் மனிதநேயமற்ற பிற்போக்கு சிந்தனைகள் மற்றும் செயல்களிலிருந்து விடுபடுமளவிற்கு மனநிலையை மாற்றும் பணியைத்தான் முனைப்பாகச் செய்ய வேண்டியுள்ளது.
- குக்கிராமங்களில் உள்ள மக்களின் மனதிலும், அன்றாட செயல்பாடுகளில் உள்ள சாதிப்பாகுபாடுகள் இன்னும் அழிக்கப்படாமல் உள்ளன.பிற்போக்குச் சிந்தனைகளை எதிர்கொண்டு அவர்களுக்கு நல்லறிவை ஊட்டுவதில் முறை சார்ந்த மற்றும் முறை சாராக் கல்வி பெருமளவு உதவி செய்கிறது. அதனால் நல்ல ஆரோக்கியமான சகோதர மனப்பான்மை வலுப்பெறுவதுடன், சமூக ஒருமைப்பாடும் சமூக அமைதியும் ஏற்படும்.

## குழந்தைத் தொழிலாளர்

- குழந்தை தொழிலாளர் பற்றிய குழுவின் அறிக்கை (1976 - 1979) ன்படி "குழந்தை தொழிலாளி, பொதுவாக குழந்தைகளில் ஒரு பிரிவினர் ஊதியம் பெற்றோ அல்லது ஊதியம் பெறாமலோ உழைப்பில் பங்கெடுத்தல்" என்ற முறையே குழந்தைத் தொழிலாளர் என வரையறுக்கப்பட்டுள்ளது.
- குழந்தை தொழிலாளர் என்பது பொதுவாக பல வழிகளில் தெளிவுபடுத்தப்பட்டாலும், முதலாவதாக, அது ஒரு பொருளாதார பயிற்சி இரண்டாவதாக, அது ஒரு சமூக கொடுமை,

- உலகிலேயே இந்தியாவில் தான் அதிகமான குழந்தை தொழிலாளிகள் இருப்பதாக கருத்து நிலவுகிறது.

**குழந்தை தொழிலுக்கான களங்கள்**

- அமைப்பு சார்ந்த தொழிலிலோ, அமைப்பு சாராத தொழிலிலோ ஈடுபடுத்தப்படலாம்.
- கம்பளம் நெய்தல், தீப்பெட்டித் தொழிற்சாலை, பட்டாசுத் தொழிற்சாலை, பீடி சுற்றுதல், உணவு விடுதிகள், மோட்டார் பழுதுபார்த்தல், கல்லுடைத்தல், காகிதம் பொறுக்குதல், வீட்டு வேலை செய்தல், பிச்சையெடுத்தல் போன்ற குறிப்பிடத்தக்கவை குழுந்தை தொழிலுக்கான களங்கள் ஆகும்.

**குழந்தைத் தொழிலுக்கான காரணங்கள்**

- ஏழ்மை இதற்கான முக்கிய காரணமாகும். குழந்தை வேலைவாய்ப்பு, பெற்றோர்களுடைய பொருளாதார தேவைக்கான அனுமதிப்பட்ட ஒரு சுரண்டுதல்.
- பெற்றோர்களின் அக்கறையின்மை அல்லது அக்கறை குறைவு, குழந்தைகளை அவர்களது பிஞ்சு வயதிலேயே வேலையைத் தேட கட்டாயப்படுத்துகிறது.
- பெற்றோரின் குறைந்த வருமானம், குழந்தைகளின் குறைந்தபட்ச தேவைகளுக்கு கூட போதாமல் குழந்தைகள் கல்வியை துறந்து வேலைகளில் சேருகின்ற நிலையை உருவாக்குகிறது.
- பெரும்பாலும் ஏழ்மையுடன் மற்ற சமூக பண்பாட்டு காரணிகளும் குழந்தைகளை எழுத்தறிவின்மை மற்றும் அறியாமை பெருமளவில் இருப்பதால், குழந்தைகளுக்கு தங்கள் எதிர்காலத்தைப் பற்றி வழிகாட்டுதல் கிடைப்பதில்லை.
- பொருளாதாரத் தேவைகளினால் குழந்தைகள் பணிகளுக்குத் தள்ளப்படுகின்றனர்.

**குழந்தைத் தொழிலாளியின் தாக்கம்**

- உடலுழைப்பு, குழந்தைகளின் வளர்ச்சியில் ஒரு மோசமான பாதிப்பை உருவாக்குகிறது.
- உழைப்பின் தாக்கம், பொதுவான நிலை மற்றும் நற்பண்பு மீது அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது.
- உடலுழைப்பு மற்றும் அதன் தொடர்புடைய மற்ற பணிகளின் அழுத்தம், குழந்தைகளை சிலசமயம் பலவீனம் அடையச் செய்கிறது.

- ஓர் உழைப்புச் சக்தியின் ஊற்றாக குழந்தையைப் பயன்படுத்துவது பலருக்கு சமுதாயம் மற்றும் பொருளாதார பிரச்சனைகள் பற்றிய பல கேள்விகளை எழுப்புகின்றது.
- மக்கள் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் குழந்தைகளின் பொருளாதார பங்களிப்பு ஒரு முக்கிய காரணியாயிருந்து, குறைந்த சம்பளத்தில் மேன்மேலும் குழந்தைத் தொழிலாளர் தேவை என்ற நிலையை உருவாக்குகிறது.
- குழந்தை தொழிலாளி, மற்ற பாதிப்புகளுடன் பெரியவர்களுக்கு வேலையில்லா நிலைமையை உண்டாக்குவதோடு குறைந்த உற்பத்தி, மனித சக்தியினை முழுமையாக பயன்படுத்த முடியாமல், பொருளாதார நஷ்டத்தை சமுதாயத்திற்கு ஏற்படுத்துகிறது.

**குழந்தை தொழிலுக்கு எதிராக அரசின் நடவடிக்கைகள்**

- இந்த அரசியலமைப்புச் சட்டம் தவிர்த்து, குறைந்தது 13 முக்கியச் சட்டங்கள் குழந்தைகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1948 - ஆம் ஆண்டு பண்ணை தொழில் சட்டம், 1950 - ஆம் ஆண்டு மோட்டார் (சீருந்து) போக்குவரத்து தொழிலாளர் சட்டம், 1938 - ஆம் ஆண்டு குழந்தை தொழிலாளர் சட்டம் போன்றவை பல மாநிலங்களில் கொண்டு வரப்பட்டன, இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வி, மதிய சத்துணவுத் திட்டம் மற்றும் பிற ஊக்குவிப்புகள் குழந்தைகள் தொழிலாளர்களாக மாறுவதை குறைப்பதற்கு வழியாக அமைந்துள்ளது.

**அரசு சாரா அமைப்புகளின் பங்கு**

winmeen

- அரசின் பல்வேறு திட்டங்களால், குழந்தை தொழிலாளர்களின் பிரச்சனைகளை நீக்குவதற்கு அல்லாமல் குறைப்பதற்கு, எதிர்பார்த்தபடி விளைவுகள் ஏற்படாததற்கு மக்களின் பங்களிப்பின்மையும் ஒரு காரணம்.
- மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வியை பரப்பும் நிகழ்ச்சிகள், எளிய குடும்பங்களை உயர்த்தும் சமூக பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் சமூக கண்காணிப்பினால் குழந்தை தொழிலாளியை கண்டுபிடித்து தடுப்பது போன்ற பலவற்றை மேற்கொள்ள அரசு சாரா அமைப்புகள் முக்கிய பங்கை ஆற்ற முடியும்.

**அமைப்புச் சாரா தொழிலாளர்கள்**

- தற்காலத்தில் அமைப்புச் சாரா தொழிலாளர்களின் அவலநிலைகளை குறித்து ஒரு விழிப்புணர்வு வளர்ந்து வருகிறது. இந்த அமைப்பு சாரா

தொழிலாளர்களை பொறுத்தவரையில் பணி தருபவர் - பணிபுரிபவர் பந்தமின்றி சமூக பாதுகாப்பு முறைகள் ஏதுமின்றி உள்ளது.

- அமைப்பு சாரா தொழிலாளர்களில் வேளாண்மை தொழிலாளர்கள், சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள், சாலைத் தொழிலாளர்கள், சூளைத் தொழிலாளர்கள், துணி நெய்பவர்கள், கட்டிட வேலையாட்கள், குப்பை பொறுக்குபவர்கள் அடங்குவர்.
- இந்த தொழிலாளர்கள் பல்வேறு வேலைகளில் மற்றும் பொறுப்புகளில் ஈடுபட்டுள்ளனர். தங்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட பணிதருபவர் இல்லாமல், தங்களுக்கு எந்த வேலை உத்திரவாதமும் (பணி பாதுகாப்பு) இல்லாமல், தங்களுக்கு உள்ள சொற்ப சொத்து மற்றும் கைத்திறனில் ஒரு வாழ்க்கைத் தேடி அலைகின்றனர்.
- அமைப்புச் சாரா பெண் தொழிலாளர்கள் மற்றொரு சமூக பிரச்சனை. பெண்கள், அமைப்பு சாரா தொழிலாளர்களில் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். தற்பொழுது அவர்களின் பணி நிலைமைகள் உயர்த்தப்பட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அது வீட்டு வேலைகள் செய்வோரது குழந்தைகளைப் பராமரிக்க பால்வாடிகள், அங்கன்வாடிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவைகள் அமைப்பு சாரா பெண் தொழிலாளிகளின் குழந்தைகளை பொறுப்பெடுத்துக் கொள்கிறது.
- இந்தியாவில் அமைப்பு சாரா பணியாளர்களில் 39.7 சதவீதம் பேர் வறுமை கோட்டிற்குக் கீழே உள்ளனர்.

**இடம் பெயர்ந்த தொழிலாளர்கள்**

- இந்தியாவில் பெருமளவு மக்கள் எழுத்தறிவற்றவர்களாய், வேலையில்லாதவர்களாய் மற்றும் திறனற்ற வேலையாட்களாய் மிகுந்த ஏழ்மையில் உள்ளனர். பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் இந்த பிரச்சனையை மேலும் அதிகரிக்கச் செய்கிறது. பலர் தங்கள் இருப்பிடத்தில் வருவாய் ஈட்டும் வாய்ப்பு கிடைக்காமல், அடிக்கடி ஏற்படும் வறட்சி, பஞ்சம் மற்றும் ஏனைய சீரழிவுகளால் வேறு இடங்களுக்கு சென்று வேலை வாய்ப்புகளைத் தேடுகிறார்கள்.
- புலம் பெயர்தோர், சாலை அமைத்தல், கல்குவாரி மற்றும் செங்கல் சூளை, சுரங்கத் தொழில், மரம் வெட்டுதல் மற்றும் பல ஆபத்தான வேலைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். அவர்களில் ஒரு சிலர் வீட்டு வேலை, சிற்றுண்டி சாலைகளில் மற்றும் பல நிறுவனங்களில் எடுபிடிகளாய் வேலை செய்கிறார்கள்.
- இடம் பெயர்ந்தோர் வேலைவாய்ப்பில், ஏற்ற ஊதியம் கிடைப்பதில்லை. அவர்களுக்கு உயிருக்கு எந்த பாதுகாப்பும் (உத்திரவாதம்) கிடையாது. அவர்கள்

சுகாதாரமற்ற, தற்காலிக குடியிருப்புகளில், சுத்தமில்லாத தண்ணீர், சத்து இல்லாத ஆகாரம் இவற்றோடு வாழவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அவர்களது சுகாதாரத்திற்கும், அவர்கள் பிள்ளைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பிற்கும் எந்தவித வாய்ப்பும் கிடையாது.

- இவர்கள் எப்போதும் ஒப்பந்தக்காரர்களால் தொடர்ந்து சுரண்டப்படுகிறார்கள். அவர்கள் மொழி தெரியாத இடங்களில் வேலை செய்வதால், அவர்கள் கண்டிப்பாக எதையும் கேட்க முடியாமல் மற்றும் வேண்டிய தீர்வுகளையும் பெற முடியாமல் போகிறது. ரேஷன் கார்டுகள் (குடும்ப அட்டை) மற்றும் பொது விநியோக முறையில் வழங்கப்படும் பயன்கள் அவர்களுக்கு எட்டாத ஒன்று என்பது ஒரு உண்மையாகும். உண்மையில் இடம்பெயர்ந்த வேலையாட்கள் பெரும்பாலும் கொத்தடிமைகளாக நடத்தப்படுகிறார்கள்.
- வளர்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் இடம் பெயர்ந்த தொழிலாளர்கள்.

**திருநங்கையார் (Transgender)**

- 1970 ஆண்டுகளில் டிரான்ஸ்ஜெண்டர் என்ற குறிப்பிட்டச் சொல் பரவலாக வழக்கில் கையாளப்படலாயிற்று. இந்தச் சொல் ஆண் - பெண் ஆகிய இருபாலராகவும் இல்லாதவர்கள், அப்படியே தொடர விரும்புவர்களைக் குறிப்பதாக அமைந்துள்ளது.
- 1980 இல் பிறவியிலேயே ஆண் - பெண் பாலினங்களில் வராத அனைத்து மனிதர்களின் குறியீட்டுப் பெயராக "டிரான்ஸ்ஜென்டர்" என்ற "திருநங்கையார்" என்று தமிழில் அழைக்கிறோம்.

**திருநங்கையருக்கான அரசின் கொள்கைகள்**

- திருநங்கையாரை தனியான மூன்றாவது பால் பிரிவினராக ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு குடும்ப அட்டைகளை வழங்கி, முதல் மாநிலமாகத் தமிழ்நாடு சிறப்பு பெற்றுள்ளது.
- இப்போது கடவுச் சீட்டு பெற விண்ணப்பிக்கும் போது ஆண் - பெண் - திருநங்கையார் என்று மூன்று பாலியங்களில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பிடும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

**திருநங்கையருக்கான திருமணத் தகவல் மின்வலை**

- உலகிலேயே முதன் முதலாக திருநங்கையருக்கு என திருமணத் தகவல் மின்வலை (Website) சென்னையில் துவங்கப்பட்டது. திருநங்கைநெட் (Thirunangai.net) என்பது தமிழ் மொழி பேசும் திருநங்கைக்கான திருமணத் தகவல் இணையதளமாகும். இவர்களில் திருநங்கையர் (Transwomen)

எனப்படுவோர் உடலால் முழுமையான பெண்களாகவே கருதிக் கொள்பவராவார்.

**தமிழ்நாட்டில் திருநங்கையாருக்கான முன்மாதிரிக் கிராமங்கள்**

- இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் கடலூர் மாவட்ட நிர்வாகம் திருநங்கையர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு, முன்மாதிரிக் குடியிருப்புகளை அமைக்க முன்வந்துள்ளது. திருநங்கையருக்கு, அதிகாரபூர்வமாக மூன்றாவது பாலின அந்தஸ்தை அளிக்க ஒரே மாநிலம் தமிழகம் ஆகும்.
- கடலூரில் இரண்டு ஏக்கர் நிலம், வருவாய்த்துறை அதிகாரியால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இங்கு திருநங்கையர் ஒவ்வொருவருக்கும் 3 சென்ட வீட்டுமனையும், அதில் 308 சதுர அடியில் வீடகள் கட்டிக்கொள்ள கடனுதவியும் தரப்படவுள்ளன.

**கல்வி**

- அரசுக் கல்லூரிகளில் திருநங்கையருக்கு அனுமதியளிக்கும் அரசாணை தமிழக அரசால் கொண்டு வரப்பட்டுள்ளது.
- நாட்டிலேயே முதன்முறையாகத் திருநங்கையருக்கு கல்லூரிகளில் இடமளிக்கும் அரசாணையை மாநில உயர் கல்வித் துறை வெளியிட்டுள்ளது. திருநங்கையருக்கு வேலை வாய்ப்பை அதிகரிப்பதற்காக அவர்களுக்கு கணினிப் பயிற்சியை அளிக்கவும் தமிழக அரசு முன்வந்துள்ளது.

## 34. நுகர்வோர் உரிமைகள்

ஒரு பொருளை முழுமையாகப் பயன்படுத்துபவரே நுகர்வோர் ஆவார். ஒரு பொருளை விலைகொடுத்து வாங்கும்போதோ அல்லது அதனை உபயோகிக்கும் போதோ நாம் நுகர்வோர் ஆகிறோம்.

**நுகர்வோர் ஏமாற்றப்படும் விதங்கள்**

- சிக்கனமான முறையில் வியாபாரத்தை விரிவாக்கும் நோக்கில் பல விதமான பொருட்கள் நமக்கு சந்தைகளில் மலிவான விலையில் கிடைக்கின்றன.
- நுகர்வோரை கவரும் பொருட்டு அவர்களுக்குத் தேவையான விவரங்கள் அடங்கிய விளம்பரங்களை பெரும்தொகையை செலவு செய்து நிறுவனங்கள் வெளியிடுகின்றன. ஆனால் பொருட்களில் உற்பத்தி பற்றிய விவரங்களை வெளியிடுவதில்லை. இதனால் பொருட்களைப் பற்றிய உண்மை நிலையினை

அறிந்து கொள்ள முடியவில்லை. எனவே நுகர்வோர் சில நேரங்களில் ஏமாற்றப்பட்டு, வியாபாரிகளால் துன்புறுத்தப்படுகிறார்கள்.

- சந்தைகளில் விற்கப்படும் பொருட்களின் அளவு மற்றும் எடை சரியாக இருப்பதில்லை. சந்தைகளில் சில சமயங்களில் தரம் குறைந்த பொருட்கள் விற்கப்படுகின்றன. காலாவரியான மருந்து, மாத்திரைகளை விற்பனை செய்வதும், தரமற்ற வீட்டு உபயோகப் பொருட்களை விற்பனை செய்வதும் பொதுவான குறைகளாக நுகர்வோரால் கருதப்படுகிறது.
- பொருட்களில் அதன் உண்மையான விலையை விட கூடுதலான விலையில் விற்கப்படுகிறது. பொருட்களின் உண்மையான உற்பத்தியாளர்களின் பெயரில் போலியான பொருட்கள் விற்கப்படுகின்றன.

**நுகர்வோரின் உரிமைகள்**

- நுகர்வோரின் பொருட்கள் அவர்களது வாழ்க்கைக்கும், அவர்களது சொத்திற்கும் பாதிப்பினை ஏற்படுத்தும் வேளையில் அவர்கள் அந்தப் பொருட்களைக் குறித்தும் அவர்களது சேவைகள் குறித்தும் தங்களது எதிர்ப்பினைத் தெரிவிக்கும் உரிமை பெற்றுள்ளனர்.
- பொருட்களின் தரம், அளவு, தன்மை, அதனுடைய உண்மை நிலை, பொருட்களின் விலை ஆகியவை குறித்த உண்மையான நிலைகளை, தெளிவாக நுகர்வோர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.
- பல வகையான பொருட்களை நியாயமான விலையில் பெறுவதற்கான வாய்ப்பும் வசதிகளும் செய்து கொடுக்கப்படுவது, தனிப்பட்ட வியாபாரியிடமிருந்து நுகர்வோர், பொருளை வாங்கும் போது அந்தப் பொருள் தரமானதாகவும், நியாயமான விலையில் இருக்கிறது என்று சொல்வாற்கும் உரிமை பெற்றுள்ளார்.
- நுகர்வோரின் நலன்கள், சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் தீர்வு செய்யப்பட வேண்டும்.
- தவறான வியாபார முறைகள் குறித்தோ அல்லது நுகர்வோர் தாங்கள் சுரண்டப்படுகின்ற வேளையிலோ, தங்களுக்குச் சரியான தீர்ப்பு கிடைக்கும் வகையில் நுகர்வோர் தங்களது குறைகளை எடுத்துக்கூறி தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம்.
- நுகர்வோரின் நலனுக்கான பொருட்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- 2005 - ஆம் ஆண்டு அக்டோபர் 12 - ஆம் நாள் தகவல் அறியும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனால் பொது நிறுவனங்கள் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் அறிந்து கொள்வது பொது மக்களின் அடிப்படை உரிமையாகும்.

**தகவல் அறியும் சட்டத்தின் நோக்கங்கள்**

- ஒளிவு மறைவற்ற நேர்மையான, நம்பகத்தன்மையான செயல்பாடுகளில் பொது நிறுவனங்கள் செயல்படுதல் வேண்டும்.
- பொது நிறுவனங்களின் செயல்பாடுகளை அறிந்து கொள்ள பொது மக்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.
- மத்திய, மாநில, மாவட்ட மற்றும் உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சி அமைப்புகள் போன்ற அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ளும் பொருட்டு தகவல் அறியும் உரிமைச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- தனியார் மற்றும் அரசு சாரா நிறுவனங்களை, அரசாங்கம் மற்றும் பொதுமக்களின் நிதியைக் கையாளும் நிறுவனங்கள் இச்சட்டத்திற்கு உட்பட்டது. இந்நிறுவனங்களைச் சார்ந்த அனைத்து தகவல்களையும் எழுத்துமூலமாகவோ அல்லது ஆவணங்களைப் பெறுகின்ற உரிமையோ ஒவ்வொரு குடிமகனின் உரிமை ஆகும்.
- இத்தகைய உரிமை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பொது நிறுவனங்களிடமிருந்து நுகர்வோர் தங்களுக்குத் தேவையான தகவல்கள் அறிய வகை செய்யும் சட்டம் மக்களின் அடிப்படை உரிமையென பாராளுமன்றத்தால் சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

**நுகர்வோரின் பாதுகாப்பு நடவடிக்கைகள்**

- நுகர்வோரின் தேவைகளைப் பாதுகாக்கும் பொருட்டு அரசு மூன்று வழிமுறைகளை வகுத்துள்ளது.
- சட்டம் சார்ந்த நடவடிக்கைகள்
- நுகர்வோர் பாதுகாக்கும் சட்டத்தை ஏற்படுத்துதல்
- நுகர்வோர் பாதுகாக்கும் சட்டத்தை ஏற்படுத்துதல்
- நுகர்வோர் சார்ந்த நடவடிக்கைகள்
- பொது விநியோக முறையில் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகித்தல்.
- தொழில் நுட்பம் சார்ந்த நடவடிக்கைகள்
- பொருட்களின் தரம் பாதுகாக்கப்படல்.

**நுகர்வோர் உரிமைகள் சார்ந்த சட்டங்கள்**

- 1986 - ஆம் ஆண்டு நுகர்வோரைப் பாதுகாக்கும் பொருட்டு, அரசால் இயற்றப்பட்ட சட்டம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் என்று அழைக்கப்படுகிறது.

- நுகர்வோர் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு மத்திய, மாநில அரசுகளில் தனித்தனி துறைகள் செயல்பட்டு வருகிறது.
- இந்தச் சட்டத்தின் மூலம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள அம்சங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

**சட்டப்படி புகார் செய்யும் முறைகள்**

- புகார் அளிப்பதற்கென்று தனிமுறைகள் எதுவும் இல்லை. நுகர்வோர், ஒரு வியாபாரியினாலோ அல்லது உற்பத்தியாளராலோ ஏமாற்றப்படும் பொழுது, ஒரு வெள்ளைத்தாளில் தனது புகாரை எழுதி தாக்கல் செய்யலாம்.
- பொருள் சம்பந்தமான ரசீதுகள், உத்திரவாதம், பாதுகாப்பு நகல்கள் ஆகியவற்றை அத்துடன் சேர்த்து இணைத்து மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். நுகர்வோர் வேறு எந்த வழக்கறிஞர் உதவியை நாடவேண்டிய அவசியமில்லை. நுகர்வோர் தாமே இந்த விவகாரம் தொடர்பாக நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்காடலாம்.
- இந்த சட்டத்தின் முக்கியமான அம்சம் மூன்று அடுக்குளாக தேசிய அளவில், மாநில அளவில் மற்றும் மாவட்ட அளவில் விசாரணைகள் மேற்கொள்ள நுகர்வோர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- தேசிய அளவில்: தேசிய நுகர்வோர் கழகம் (டெல்லி)
- மாநில அளவில்: மாநில நுகர்வோர் கமிஷன்
- மாவட்ட அளவில்: மாவட்ட அமைப்பு

**பொது விநியோக முறை**

- பொது நிர்வாக முறையின் கீழ் அனைத்து ஏழைகளுக்கும் உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதி செய்வது,
- உணவுப் பொருட்கள் கடத்தல்களையும், பதுக்கல்களையும் தடுப்பது, வியாபாரிகள் அதிக விலைக்கு பொருட்களை விற்பதையும் தடுப்பதற்காக பொது விநியோக முறை வலுப்படுத்தப்பட வேண்டும்.

**தரமான உற்பத்தியைப் பெருக்குதல்**

- இந்தியாவில், பொருட்களின் தரத்தைக் குறிக்கும் பொருட்டு தொழில் சார்ந்த மற்றும் நுகர்வோர் பொருட்களின் மீது இந்திய தரக்குழுமம் குறியீடு BIS என்றும் விவசாயம் சார்ந்த பொருட்களின் மீது அக்மார்க் முத்திரையும் பொறிக்கப்படுகிறது.
- உலகில், பொருட்களின் தரத்தை உறுதி செய்வதற்கு உலகத்தர அமைப்பு (ISO) 1947 - ஆம் ஆண்டு ஜெனிவாவில் துவக்கப்பட்டது. இது ஒரு அரசு சாரா

நிறுவனமாகும். உலக அளவில் பொருட்களின் தரத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு இதன் செயல்பாடுகள் அமைந்துள்ளன.

- உணவுப் பொருட்கள் சம்பந்தப்பட்ட உலகத் தரத்தினை அறிந்து கொள்ளும் பொருட்டு கோடாக்ஸ் அலுமென்டேஷன் கமிஷன் (Codex Alimentation Commission) நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் (CAC), 1963 - ஆம் ஆண்டு இத்தாலியில் ரோம் நகரில், உணவு மற்றும் வேளாண்மை துறை நிறுவனம் (FAO) மற்றும் உலக சுகாதார நிறுவனம் (WHO) போன்றவற்றை நிறுவியது.
- ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 24 - ஆம் தேதி, இந்திய தேசிய நுகர்வோர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. அந்த நாளில் தான் 1986 - ஆம் ஆண்டு இந்தியப் நாடாளுமன்றம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தினை இயற்றியது.
- ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15 - ஆம் நாள் 'உலக நுகர்வோர் தினம்' அனுசரிக்கப்படுகிறது. 1962 - ஆம் ஆண்டு இதே நாளில் தான் நுகர்கோரின் உரிமைகள் அடங்கிய நகர் அமெரிக்க காங்கிரஸ் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
- ரால்ஃப்நாடார் என்பவர் நுகர்வோர் இயக்கத்தின் தந்தை என்று கருதப்படுகிறார்.

**'கோப்ரா'வின் தோற்றம்**

- நுகர்வோரின் குறைகளை வெளிப்படுத்தும் உரிமையின் காரணமாக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் (COPRA) 1986 - ஆம் ஆண்டு இந்தியாவில் இயற்றப்பட்டது. இச்சட்டம் நுகர்வோரின் மகாசாசனம் என்று அழைக்கப்படுகிறது.

**நுகர்வோரை பாதுகாக்கும் வகையில் தமிழக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள்**

- அனைத்து வகையான கல்வி நிறுவனங்களிலும் நுகர்வோர் கழகங்கள் அமைக்கப்படுதல், கிராமப்புறங்களில் நுகர்வோர் பற்றிய விழிப்புணர்வை மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி மன்ற பிரதிநிதிகள் மூலம் ஏற்படுத்தப்படுகிறது.
- நகர்புறங்களில் குடியிருப்பு நல சங்கங்களின் மூலம் அறிமுகப்படுத்தப்படுகிறது. கருத்தரங்கம் மற்றும் பொது பணிமனையின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுதல், 'தமிழ்நாடு நுகர்வோர் கவசம்' என்ற மாத இதழின் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்கப்படுகிறது.
- நுகர்வோர் பற்றிய விழிப்புணர்வு வானொலி, தொலைக்காட்சி மற்றும் குறும்படங்களின் மூலம் பொது மக்களுக்கு பிரச்சாரம் செய்யப்படுகிறது.

- குடிமக்களை மதிப்புள்ள நுகர்வோராக உருவாக்கும் பொருட்டு தமிழக அரசுடன் இணைந்து பல நுகர்வோர் சங்கங்கள் நுகர்வோருக்குத் தேவையான அறிவினையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

**பல்வேறு நாடுகளிலுள்ள நுகர்வோர் சட்டங்கள்**

**அமெரிக்க ஐக்கிய நாடுகள்**

- அமெரிக்காவில், நுகர்வோர் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு மத்திய, மாநில அளவில் பல வகையான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.
- அவைகள் 'கூட்டமைப்பு நியாய கடன் வசூல் முறைச் சட்டம்' (The Federal Fair Debt Collection Practices Act) 'நியாய கடன் அறிக்கைச் சட்டம்' (Fair Credit Reporting Act) 'உண்மை கடனளிப்புச் சட்டம்' (Truth in Lending Act) போன்றவைகளாகும்.
- மாநில அளவில் பல துறைகள் உருவாக்கப்பட்டு, நுகர்வோரின் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஐக்கிய பேரரசு**

- ஐரோப்பிய கூட்டமைப்பில் ஐக்கிய பேரரசு ஒரு அங்கமாக உள்ளது. ஐரோப்பிய கூட்டமைப்பில் உள்ள நுகர்வோர் பாதுகாப்புச் சார்ந்த சட்டங்களை செயல்படுத்துகிறது. இது நுகர்வோரின் பாதுகாவலனாகவும் செயல்படுகிறது.

**ஜெர்மனி**

- நுகர்வோரின் உரிமைகள் மற்றும் பாதுகாக்கும் பொறுப்பு ஒரு கூட்டாட்சி அமைச்சரவை மந்திரிக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**நுகர்வோர் சட்டத்தின் நிறைகள்**

- விழிப்புணர்வு ஏற்படுத்துதல் - நுகர்வோர் சட்டம் மக்களிடையே பொருட்களின் விலை, தரம் மற்றும் சேவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- சமூகம் பற்றியவை - பொருட்களின் உற்பத்தி மற்றும் சேவை பிறரைப் பாதிக்காமல் இச்சட்டம் செயல்படுகிறது.
- சுற்றுச்சூழல் பற்றியது - நுகர்வோரின் பொருள் பயன்பாட்டால் சுற்றுச்சூழலில் ஏற்படும் விளைவுகளை அறிந்து கொள்ள உதவுகிறது.

**நுகர்வோர் சட்டத்தின் குறைகள்**

- பல வழிகளில் நுகர்வோர் கவர்ச்சகரமான விளம்பரங்களின் மூலமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

- விற்பனையாளர்கள் நுகர்வோரின் பலவீனங்களைப் புரிந்து கொண்டு அதற்கோற்றாற்போல் பொருட்களை மாற்றுதல், பரிசு கொடுத்தல், குலுக்கல் நடத்துதல் போன்றவைகள் மூலம் நுகர்வோர்களை ஏமாற்றுகின்றனர். இதனால் ஏற்படும் பிரச்சனைகளை ஏராளமானோர் நுகர்வோர் மன்றங்களுக்கு கொண்டு செல்வதில்லை.
- நுகர்வோர் ஒரு ராஜாவைப் போல் இருந்தாலும் அவர்கள் அநேக நாடுகளில் பலவழிகளில் ஏமாற்றப்படுகிறார்கள்.
- மக்களுக்கு நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொருட்கள் பற்றிய போதுமான விழிப்புணர்வு இல்லை.

**நுகர்வோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய நடப்புத் திட்டங்கள்**

- உயர் அதிகாரிகளுக்கு, தலைவர்களுக்கு உரிய பயிற்சிகள், கலந்துரையாடல்கள் மூலமாகவும் மற்றும் பொதுக் கல்வி நடவடிக்கைகள் மூலமாகவும் கொடுக்கப்பட வேண்டும்.

**பிற நடவடிக்கைகள்**

- நுகர்வோர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பிற நடைமுறைகள்
- வர்த்தகக் கண்காட்சி
- நுகர்வோர் விழா
- சுயஉதவிக் குழுக்களுக்கும், பஞ்சாயத்து குழுக்களுக்கும் நுகர்வோர் விழிப்புணர்வு குறித்த பயிற்சி கொடுத்தல்.
- கூட்டு ஆர்வலர்கள்.
- குடியிருப்போர் நலச் சங்கங்கள் மூலம் நுகர்வோர் உரிமைகள் குறித்து கருத்தரங்கம்/பயிற்சி நடத்துதல்.
- வியாபார நோக்கமற்ற பணிமனைகள் நடத்துதல்.
- வங்கிக் கடன் அட்டைகள் வாயிலாக கருத்தரங்கங்கள்.
- கருத்தரங்கங்கள் நடத்துதல் போன்றவற்றின் மூலம் நுகர்வோர் உரிமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம், மக்களிடையே நுகர்வோர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தி வருகின்றன.

## 35. சாலைப்பாதுகாப்பு

- இந்தியா உலகிலேயே அதிகமான போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது நாடாகும். மூன்று மில்லியம் கி.மீ. நீளமுள்ள சாலையில், 60 சதவீதம் தார் சாலைகளாக உள்ளது.
- இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு சாலைகளின் பங்கு குறிப்பிடத்தக்கவை.

**சாலைப்பாதுகாப்பின் முக்கியத்துவம்**

- ஒவ்வொரு மனிதரும் சாலை பாதுகாப்புப் பற்றியும் சட்ட திட்டங்கள் பற்றியும் அறிந்திருக்க வேண்டும்.
- சாலை போக்குவரத்து உதவிக்கு தொலைபேசி எண் 103

**விபத்து ஏற்பட முக்கியக் காரணிகள் தனிப்பட்ட காரணங்கள்**

- வயது முதிர்வு, சோர்வு, உடல்நலக்குறைபாடு, வாகனம் ஓட்டுதலில் போதிய பயிற்சியின்மை மற்றும் மனநிலை குறைபாடுகள்.

**சுற்றுச்சூழல் காரணிகள்**

- தட்டவெப்ப நிலை, இயந்திரக் கோளாறு, ஓட்டுநரின் கவனக்குறைவு போன்றவைகள் விபத்து ஏற்பட முக்கியக் காரணிகளாகும்.

**இந்தியாவில் சாலை விதிகள் (போக்குவரத்து)**

- 1989 - ஆம் ஆண்டு ஜீலை 1 - ஆம் தேதி, இந்தியாவில் கொண்டுவரப்பட்ட சாலைப் போக்குவரத்துச் சட்டம் வாகன ஓட்டுநர்களுக்கு ஒரு அடிப்படை வழிகாட்டியாக அமைந்துள்ளது.
- வாகன ஓட்டுநர் வாகனத்தை முந்திச் செல்லுதல் பற்றியும், போக்குவரத்து விதிகள் பற்றியும், வேக அளவு பற்றியும் தன்னோடு எடுத்துச் செல்ல வேண்டிய ஆவணங்கள் பற்றியும் சாலை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சாலைப் பாதுகாப்பின் முக்கிய விதிகள்**

**இடப்புறம் செல்லல்**

- வாகன ஓட்டுநர்கள் சாலையின் இடப்புறத்திலேயே வாகனங்களைச் செலுத்துதல் வேண்டும்.

**வண்டியினை முந்துதல்**

- முன் செல்லும் வண்டியினை வாகன ஓட்டுநர்கள் முந்திச் செல்வதை கூடுமானவரை தவிர்க்க வேண்டும்.

**குறுக்குச் சாலைகளில் கவனம்**

- வாகன ஓட்டுநர் குறுக்குச் சாலை அல்லது பாதசாரிகள் கடக்கும் இடங்களில் வண்டியுன் வேகத்தைக் குறைத்துச் செல்லல் வேண்டும்.

**அவசர ஊர்திகளுக்கு வழிவிடல்**

- தீயணைப்பு வாகனம், அவசர ஊர்தி மற்றும் நோயாளர் வண்டி போன்றவைகளுக்கு வாகன ஓட்டுநர்கள் தடையின்றி வழிவிடல் அவசியமாகும்.

**'U' திருப்பம்**

- வாகன ஓட்டுநர்கள் 'U' திருப்பம் இல்லாத இடங்களில் தங்களது வாகனங்களை திருப்பக் கூடாது.

**வாகன ஓட்டுநர்களின் சைகைகள்**

- தங்கள் வாகனத்தை மெதுவாக ஓட்டும் போது, அதற்குரிய சைகையை ஓட்டுநர் காட்ட வேண்டும், மேலும், இடப்புறமாகவோ அல்லது வலப்புறமாகவோ வாகனத்தைத் திருப்பும் முன் சைகை காட்டவேண்டும். தமது வாகனத்தை நிறுத்தும் முன் அதற்குரிய சைகையைக் காட்ட வேண்டும்.
- திசைக்காட்டல் வாகன ஓட்டுநர்கள் 'U' திருப்பம் செய்யும் முன்பும் அல்லது இடப்புறமோ அல்லது வலப்புறமோ திருப்பும் முன் வாகனத்தில் உள்ள அதற்குரிய ஒளிவிளக்கினை எரியச் செய்ய வேண்டும்.
- நெடுஞ்சாலைகள் வண்டிகளுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பாதையில்தான் வண்டியை செலுத்த வேண்டும். வழித்தடம் மாறும் முன் முறையான சைகையைக் காட்டி வாகனத்தைச் செலுத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் மஞ்சள் கோட்டினை தாண்டிச் செல்லக் கூடாது.

**அமைதி மண்டலம் (No horn)**

- ஓட்டுநர் தேவையில்லாமல் தொடர்ந்து வாகனத்திலுள்ள ஒலிப்பாணை பயன்கடுத்துதல் கூடாது.அமைதி இடம் என்று அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் ஒலிப்பானை ஒலிக்கச் செய்தல் கூடாது.

**இடைவெளி காத்தல்**

- வாகன ஓட்டுநர் தனக்கு முன் செல்லும் வாகனத்திற்கும், தனது வாகனத்திற்கும் குறிப்பிட்ட அளவு இடைவெளி இருக்குமாறு சென்றால் விபத்தினைத் தவிர்க்கலாம்.

**ஓட்டுநர் வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள்**

- வாகன ஓட்டுநர்கள் எப்பொழுதும் தன்னுடைய ஓட்டுநர் உரிமம், வண்டியின் பதிவுச் சான்றிதழ், வாகனவரி கட்டியதற்கான ரசீது, வாகனத்திற்கான

காப்பீட்டுச் சான்றிதழ் மேலும் அனுமதி மற்றும் தகுதிச் சான்றிதழ்களையும் தன்னோடு வைத்துக் கொள்ள வேண்டும்.

**சாலை பாதுகாப்புக் குழு**

- 1986 - ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தால் சாலைப் பாதுகாப்புக்குழு அமைக்கப்பட்டது. இதன் முக்கியப் பணி சாலைப் பாதுகாப்புக் கொள்கைகளை வகுப்பதும், சாலை விபத்துக்களைக் குறைப்பதுமாகும், இக்குழு தேசிய சாலை பாதுகாப்புக் கொள்கையை உருவாக்கியது.

**சைகைகள்**

**சாலை சைகைகள்**

- சாலைகளில் உள்ள சைகைகள் போக்குவரத்தைச் சீர் செய்யவும், பாதசாரிகளை பாதுகாக்கவும் பயன்படுகிறது. இந்திய சாலை மகா சபையின் கூற்றுப்படி சாலைகளில் சைகைகள் அறிவிப்புகளாகக் கருதப்பட வேண்டும்.
- சாலை சைகைகள் 3 வகைகளாகப் பிரிக்கப்படுகிறது.

1. உத்திரவு சைகைகள்
2. எச்சரிக்கைச் சைகைகள்
3. தகவல் சின்னங்கள்

**போக்குவரத்துச் சைகைகள்**

- குறுக்குச் சாலையிலுள்ள போக்குவரத்து ஒளிவிளக்கு மற்றும் நிறுத்தல் விளக்குகள் எப்பொழுது பாதசாரிகள் சாலையினைக் கடக்கலாம் என்பதை தெரிவிக்கிறது.
- போக்குவரத்து ஒளி விளக்குகள் உலகளாவிய நிற அடையாளத்தைக் கொண்டுள்ளது.
    - சிவப்பு விளக்கு எரிந்தால் - 'நில்' செல்லாதே என்றும்,
    - ஆரஞ்சு விளக்கு எரிந்தால் - சாலையைக் ('கவனி') கடக்க தயாராக இரு என்றும்,
    - பச்சை விளக்கு எரிந்தால் - 'செல்' என்றும் அறிவிக்கின்றது.

**போக்குவரத்துக் காவலர் சைகைகள்**

- கை சைகைகள் வாகன ஓட்டுநர்கள் மற்றும் போக்குவரத்துக் காவல் துறையினர் தங்களது கைகளைப் பயன்படுத்தி போக்குவரத்தினை

முறைப்படுத்துதல், போக்குவரத்தினை சீர் செய்யவும் போன்றவற்றை மேற்கொள்கின்றனர்.

- சாலைப் பாதுகாப்பு நாட்டின் முக்கியமான ஒரு பிரச்சினையாக உள்ளது. அரசு தெரிவிக்கும் புள்ளிவிரத்தின்படி ஆண்டு ஒன்றுக்கு 1.1 இலட்சம் மக்கள் விபத்தினால் உயிர் இழக்கின்றனர் என்பது அதிர்ச்சி தரும் செய்தியாகும்.

**சாலை விபத்திற்கான காரணங்கள்**

- போக்குவரத்து விதிமீறல்
- குறிகிய சாலை
- போக்குவரத்து நெரிசல்
- குடிபோதையில் வாகனம் ஓட்டுதல்

**சாலை பாதுகாப்பிற்கு உதவும் முக்கியக் குறிப்புகள்**

- வண்டி ஓட்டும் போது கைப்பேசியைப் பயன்படுத்துதல் கூடாது.
- நான்கு சக்கர வாகனத்தை ஓட்டும்பொழுது வார்ப்பட்டை (Belt) அணிய வேண்டும்.
- மது (போதையில்) அருந்திவிட்டு வாகனத்தை இயக்கக் கூடாது.
- வேகக்கட்டுப்பாட்டை பின்பற்ற வேண்டும்.
- பாதசாரிகள் கவனமுடன் நடைபாதையில் செல்ல வேண்டும்.
- இரு சக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அவசியம் அணிய வேண்டும்.
- பாதசாரிகள் மஞ்சள் கோடுகள் போடப்பட்டுள்ள இடத்தில் மட்டுமே சாலையைக் கடக்க வேண்டும்.
- வாகன ஓட்டுநர்கள் போக்குவரத்து சைகைகளை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.
- அவசர ஊர்திகளுக்கு வாகன ஓட்டுநர்கள், அவ்வாகனங்களை முந்திச் செல்ல வழிவிடல் வேண்டும்.
- வாகனங்களை அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டுமே நிறுத்த வேண்டும் நடைபாதையில் கடைகள் நடத்தப்படுவதை தவிர்க்க வேண்டும்.
- 18 வயதிற்கு உட்பட்டவர்கள் இரண்டு சக்கர வாகனத்தையோ அல்லது நான்கு சக்கர வாகனத்தையோ ஓட்டுதல் கூடாது என்ற விதிமுறைகள் பின்பற்ற வேண்டும்.

**சாலை பாதுகாப்பு வாரம்**

- ஆண்டு தோறும் ஜனவரி முதல் வாரம் சாலை பாதுகாப்பு வாரமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இது பள்ளி, கல்லூரி மாணவர்கள், வாகன

ஓட்டுநர்கள், பாதசாரிகள் ஆகியவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது

- "எச்சரிக்கையாக வாகனம் ஓட்டுங்கள்
- இலக்கை உயிருடன் அடையுங்கள்"
- என்ற பொன்மொழி அரசால் வலியுறுத்தப்படுகிறது.

## 36. இந்தியாவும் உலக அமைதியும்

- இந்தியா ஆகஸ்ட் 15, 1947 - ஆம் ஆண்டு விடுதலை பெறும் வரை ஒரு சார்பு நாடாக விளங்கியது.
- விடுதலைக்குப் பிறகு, உலக விவகாரங்களில் தீவிரமாகவும், தன்னிச்கையாகவும் ஈடுபட்டு வருகிறது.
- இந்தியா அமைதியை அடிப்படையாகக் கொண்ட நாடு. எனவே உலகில் அமைதியை நிலைநாட்ட தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. சர்வதேச அரங்கில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### உலக அமைதியை மேம்படுத்துபவர்

- இந்தியா பல்வேறு உலகப் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் முக்கியப் பங்காற்றி வருகிறது.
- இந்தியாவின் பெரும் முயற்சியினால் கொரியா மற்றும் இந்தோ - சீனாவில் அமைதி நிலைநாட்டப்பட்டது. இதுபோன்று இஸ்ரேல், இங்கிலாந்து மற்றும் பிரான்சு போன்ற நாடுகள் எகிப்தை தாக்கிபோது உலகப்போர் ஏற்படும் ஆபத்து தோன்றியது. ஆனால் தகுந்த நேரத்தில் இந்தியா தலையிட்டு போரைத் தவிர்த்தது.

### பஞ்சசீலம்

- இந்தியாவின் 'ஒரு மாபெரும் அமைதியை உருவாக்கும் நாடு' என்றழைக்கப்படுகிறது.
- இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு 1955இல் பாண்டுங் மாநாட்டில், அமைதிக்காக 5 அம்ச கொள்கையினை வெளியிட்டார். அவை 'பஞ்சசீலம்' என அழைக்கப்படுகிறது. அவை
    1. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையை மதிக்க வேண்டும்.
    2. எந்த ஒரு நாடும் பிற நாட்டை தாக்கக்கூடாது.
    3. ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில், பிற நாடுகள் தலையிடக்கூடாது.

4. அனைத்து நாடுகளும் சமத்துவம் மற்றும் பரஸ்பர நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.
5. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கியிருத்தல் வேண்டும்.

- இப்பஞ்சசீலக் கொள்கை உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை மேலும் உயர்த்துகிறது.

**ஆயுதக்குறைப்பு மற்றும் ஆணு ஆயுதங்கள்**

- உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி உலக அமைதி மூலம் மட்டுமே அடைய முடியும். உலக அமைதி இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமன்றி, வளரும் நாடுகளின் வளர்ச்சிக்கும் அவசியமானதாகும்.
- உலக நாடுகளில் சில பெரும் ஆபத்தை விளைவிக்கும் அணுகுண்டு மற்றும் ஹைட்ரஜன் குண்டுகள் போன்றவற்றை உருவாக்கி வருகின்றன. இதனைத் தடுக்கவில்லையென்றால், உலகம் அழிக்கப்பட்டுவிடும். எனவே இந்தியா அணு ஆயுத உற்பத்தியை கடுமையான எதிர்த்ததோடு மட்டுமன்றி, அணுஆயுத உற்பத்திக்கு எதிராகவும் குரலெழுப்பி வருகிறது.
- ஐ.நா. பொதுச் சபையில் 1956 - ஆம் ஆண்டு ஆயுதக் குறைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்த முதல் நாடு இந்தியா ஆகும்.
- 1963 - ஆம் ஆண்டு ஆயுதத் தடை ஒப்பந்தம் உருவாவாற்கும் இந்தியா முக்கியப் பங்காற்றியது.

**அணிசேராக் கொள்கை**

- இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, அமெரிக்காவின் தலைமையில் ஒரு அணியும், ரஷ்யாவின் தலைமையில் மற்றொரு அணியும் உருவாகின. இந்த இரண்டு அணிகளும் தங்களது செல்வாக்கை நிலைநாட்ட பல முயற்சிகளில் இறங்கின. இதனால் உலகில் பதற்ற நிலை மற்றும் அமைதியின்மை ஏற்பட்டன.
- இந்த இரண்டு அணிகளிலும் சேராமல் இந்தியா நடுநிலை நாடாக (அணிசேரா நாடாக) விளங்கி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றிய சமயத்தில் இந்தியா அவற்றை தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு தொடர்ந்து உலகில் அமைதியை நிலைநாட்டி வருகிறது.

**மாபெரும் உதவியாளர்**

- அடிப்படையில் இந்தியா குடியேற்றக் கொள்கைக்கு எதிரானது. உலகநாடுகள் பிறநாடுகளின் பிடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கு இந்தியா பெரும் ஆதரவு நல்கி வருகிறது.

- ஹாலந்து நாட்டின் பிடியிலிருந்து இந்தோனேசியா விடுதலை பெறுவதற்கு பெரிதும் உதவிபுரிந்தது. இதேபோன்று எகிப்து சூடான், இந்தோ-சீனா,கானா, மொராக்கோ மற்றும் வங்காளதேசம் போன்ற நாடுகளில் நடைபெற்ற தேசிய இயக்கத்திற்கு இந்தியா முழு ஆதரவைக் கொடுத்தது.

**இராணுவ ஒப்பந்தங்களுக்கு எதிரானது**

- தற்கால உலகில், உலக நாடுகள் ராணுவ ஒப்பந்தங்கள் மற்றும் எதிர் ஒப்பந்தங்களை செய்து கொள்வதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. இதன் விளைவாக தற்பொழுது நேட்டோ, சீட்டோ, சென்ட்டோ, பாக்தாத் மற்றும் வார்சா போன்ற ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இந்த ஒப்பந்தங்களில் எதிலும் இந்தியா சேரவில்லை. மேலும், இந்த ஒப்பந்தங்களுக்கு கடும் எதிர்ப்பும் தெரிவித்து வருகிறது.

**அடக்க முறை மற்றும் அநீதிக்கு எதிரானது**

- உலகில் எந்தப்பகுதியிலும் அடக்கு முறை மற்றும் அநீதி இமைக்கப்படுமேயானால், இந்தியா அதற்கு உடனடியாக தனது எதிர்ப்பைத் தெரிவிக்கிறது, பிரான்சு அல்ஜீரியாவிற்கு எதிராக ஆக்கிரமிப்பை மேற்கொண்டபோதும், இங்கிலாந்து சைப்ரஸ்-க்கு எதிராகவும், ரஷ்யா ஹங்கேரிக்கு எதிராகவும் ஆக்கிரமிப்பை மேற்கொண்ட போதும் இந்தியா அந்நாடுகளை வன்மையாகக் கண்டித்தது, இதுபோன்று சீனா ஐ.நா.சபையில் உறுப்பினராவதற்கு இந்தியா தனது ஆதரவை தெரிவித்தது. இதன்மூலம் அநீதிக்கு எதிராக இந்தியா தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

**ஐ.நா.வின் தீவிர ஆதரவாளர்**

- இந்தியா ஐ.நா.வின் தீவிர ஆதரவாளராக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஐ.நா.வின் கொள்கைகளுக்கு முழு ஆதரவு கொடுப்பதோடு, அக்கொள்கை வெற்றிபெறவும் அதன்மூலம் உலக அமைதியை நிலைநாட்டவும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

**இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரானது**

- இன ஒதுக்கல் கொள்கை என்பது ஆப்பிரிக்காவில் பின்பற்றப்பட்ட இன வேறுபாட்டுக் கொள்கையாகும்.
- உலகில் அனைத்துப் பகுதியில் வாழும் மக்களும் சமமானவர்கள் என்ற கொள்கை இந்தியாவின் அயல்நாட்டு கொள்கைக்கு அடிப்படையாகத் திகழ்கிறது. தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர்கள், ஆப்பிரிக்க

குடிமக்களுக்கு சம உரிமை வழங்க மறுத்தனர். இப்பிரச்சனையை 1946 - ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையில் இந்தியா முதன் முதலில் எழுப்பியது. இந்தியா வழங்கிய தொடர் ஆதரவு மற்றும் நெல்சன் மண்டேலாவின் தொடர் போராட்டம் காரணமாக 1990 - ஆம் ஆண்டு இன ஒதுக்கல் கொள்ளை முடிவுக்கு வந்தது.

- நெல்சன் மண்டேலா ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் தலைவரானார். தென் ஆப்பிரிக்காவில் காணப்பட்ட இனப் பிரச்சனைக்கு எதிராகப் பாடுபட்டார். 27 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் 1994 - ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**வட்டாரக் கூட்டமைப்பு**

- அமைதியை நிலைநாட்ட, வட்டாரக் கூட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டது. இதன் விளைவாக சார்க் அமைப்பு தோன்றியது. தெற்கு ஆசிய நாடுகளில் பிராந்தியக் கூட்டமைப்பு முதல் கூட்டம் டிசம்பர் 7, 1985 - ஆம் ஆண்டு வங்காளத்தில் டாக்கா நகரில் நடைபெற்றது. வங்காளத்தில் டாக்கா நகரில் நடைபெற்றது. வங்காளதேசத்தைச் சேர்ந்த ஆஷான், சார்க் அமைப்பின் முதல் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். வங்காளதேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஏழு நாடுகள் உறுப்பு நாடுகளாக இடம் பெற்றன. 2007 ஏப்ரல் 3இல், டெல்லியில் நடைபெற்ற சார்க் வருடாந்திர மாநாட்டில் ஆப்கானிய அதிபர் ஹமீது கர்சாய் கலந்து கொண்டார். தற்போது ஆப்கானிஸ்தான் இதில் 8 - வது உறுப்பு நாடாக சேர்ந்துள்ளது.
- பூடான் தலைநகர் திம்புவில் 2010 ஏப்ரல் 28 மற்றும் 29 - இல் சார்க் அமைப்பின் 16 - வது மாநாடு நடைபெற்றத.
- சார்க்கின் உறுப்பு நாடுகள் தங்களுக்குள் பரஸ்பர நல்லுறவின் அடிப்படையில் போக்குவரத்து, கடித சேவை, சுற்றுலா, வானியல், சுகாதாரம், வேளாண்மை மற்றும் கிராமப் புனரமைப்பு மற்றும் தகவல் தொடர்பு போன்றவற்றில் உதவி செய்து கொள்ளுதல் என்ற அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன.

**அண்டை நாடுகளுடன் நல்லுறவு**

**இந்தியா - பாகிஸ்தான்**

- இந்தியா பாகிஸ்தானிடையே கடந்த காலங்களில் பகைமை நிலவி வந்தபோதிலும், அவற்றை முறியடித்து இருநாடுகளும் நல்லுறவை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டு வருகின்றன. மார்ச் 16, 1999 டெல்லி-லாகூர் இடையே பேருந்து போக்கவரத்து தொடங்கப்பட்டு இரு

நாடுகளிடையே நெருக்கம் ஏற்பட்டது. ஈரான், பாகிஸ்தான், இந்தியா இடையே எரிவாயு குழாய் இணைப்பு மேற்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**இந்தியா - சீனா**

- 1949 - ஆம் ஆண்டு சீனா குடியரசானதை முதலில் அங்கீகரித்த நாடு இந்தியா, இதனைத் தொடர்ந்து இரு நாடுகளும் தங்களது பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முயற்சி மேற்கொண்டன. ஐ.நா.வில் சீனா உறுப்பு நாடாகச் சேருவதற்கு இந்தியா தனது ஆதரவை நல்கியது. இதற்கு ஐ.நா.வின் பாதுகாப்புக் குழுவில் நிரந்தர உறுப்பு நாடாக இந்தியா இடம்பெற சீனா ஆதரவு நல்கியது.

**இந்தியா - இலங்கை**

- இலங்கை புத்தமதத்தை அடிப்படையாகக் கொண்ட நாடு மௌரிப் பேரரசர் அசோகர் தனது மகள் மற்றும் மகனை இலங்கைக்கு அனுப்பி புத்தமதத்தை பரப்பினார். இதனைத் தொடர்ந்து இருநாடுகளுக்குமிடையில் வியாபார உறவு ஏற்பட்டது. இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து தனது ஆதரவை வழங்கி வருகிறது. இந்த உறவு அமைதியான முறையில் தொடர்ந்து நீடித்து வருகிறது.

**இந்தியா - வங்களாதேசம்**

- முன்னால் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் பெருமுயற்சி மற்றும் ஆதரவினால் பாகிஸ்தானிடமிருந்து 1971 - ஆம் ஆண்டு வங்காளதேசம் பிரிந்து தனி நாடாகியது. 1972 - ஆம் ஆண்டு இவ்விரு நாடுகளுக்கிடையில் நட்புறவு, ஒத்துழைப்பு மற்றும் அமைதி பராமரிப்பிற்கான 25 வரு ஒப்பந்தம் ஒன்று டாக்கா நகரில் செய்து கொள்ளப்பட்டது. கங்கை நீரைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக ஏற்பட்ட பராக்கா அணைகட்டும் பிரச்சனைக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்பட்டது. இந்தியா தொடர்ந்து வங்காள தேசத்திற்கு உற்ற நண்பனாகத் திகழ்ந்து வருகிறது.

**சூயஸ் கால்வாய்**

- 1956 - ஆம் ஆண்டு எகிப்து அதிபர் நாசர் சூயல் கால்வாயை தேசிய மயமாக்கினார். இதனை எதிர்த்து பிரான்சு, இங்கிலாந்து மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் எகிப்தின் மீது படையெடுத்தன. இந்தியாவின் தலையீட்டால் போர் தவிர்க்கப்பட்டு அமைதி நிலைநாட்டப்பட்டது.

**காங்கோ**

- இது ஒரு ஆப்பிரிக்க நாடு 1960 - ஆம் ஆண்டு, இங்க உள்நாட்டுப்போர் வெடித்தது. ஐ.நா.சபை இப்பிரச்சனைக்குத் தீர்வு காணும்படி இந்தியாவைக் கேட்டு கொண்டது. இதனைத் தொடர்ந்து படைத்தளபதி கே.ஏ.எஸ்.இராஜா தலைமையில் இந்திய அமைதிப்படை காங்கோவிற்கு அனுப்பபட்டு அங்கு அமைதி நிலைநாட்டப்பட்டது.

**சைப்ரஸ்**

- தீவிர கிறித்துவர்கள் மற்றும் துருக்கி முஸ்லீம்கள் இடையே சைப்ரஸ் தீவில் உள்நாட்டுப் போர் தோன்றியது. இந்திய படைத் தளபதி திம்மையா தலைமையில் ஐ.நா. அமைதிப் பாதுகாப்புப் படை ஒன்று அனுப்பப்பட்டது. இவரது தீவிர முயற்சியால் சைப்ரஸ் தீவில் அமைதி நிலைநாட்டப்பட்டது.
- இந்தியா வன்முறையற்ற மற்றும் அஹிம்சை கொள்கைகள் மூலம் மகாத்மா காந்தியின் தலைமையில் விடுதலை அடைந்தது. விடுதலைக்குப் பிறகு உலக நாடுகளிடையே அமைதி மற்றும் நிலைப்பாட்டை நிலைநிறுத்த கடுமையாக பாடுபட்டு வருகிறது.

## 37. ஐக்கிய நாடுகள் அவை

- நமது உலகில் கி.பி.1939 முதல் கி.பி.1945 - ஆம் ஆண்டு வரையில் நடைபெற்ற இரண்டாவது உலகப்போர், முதல் உலகப் போரைவிட பெரும் அழிவை ஏற்படுத்தியது. இந்தப் போரில் 50 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர்.
- முதல் உலகப் போரின் முடிவில் ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டுக் கழகம் உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டாத காரணத்தினால் இரண்டாம் உலகப்போர் ஏற்பட்டது.
- அமெரிக்கா, சோவியத் ரஷ்யா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் உலகத்தில் உடனடியாக நிரந்தரமான அமைதி ஏற்படுத்த ஒரு புதிய அமைப்புத் தேவை என உணர்ந்தன. அதன் விளைவாக ஐக்கிய நாடுகள் அவை உருவானது.

**ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றமும், தொடக்கக் கால திட்டங்களும்**

- உலக அமைதியை நிலைநாட்ட உருவாக்கிய பன்னாட்டு நிறுவனத்தின் அடிப்படைத் திட்டங்கள், அமெரிக்காவின் ஆதரவுடன் 1939 - ஆம் ஆண்டு உருவாயின.

- உலக அமைதிக்காக செயலாற்றும் நேசநாடுகளைக் குறிப்பதற்காக "ஐக்கிய நாடுகள்" என்ற பெயரை அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத் தலைவர் பிராங்கிளின் டி ரூஸ்வெல்ட் உருவாக்கினார்.
- ஜனவரி 1 - ஆம் நாள் 1942 - ஆம் ஆண்டு, 26 நாடுகள் சேர்ந்து அட்லாண்டிக் சாசனத்தில் கையெழுத்திட்டனர். அந்தச் சாசனத்தில் 'ஐக்கிய நாடுகள்' என்ற பெயர் முதன் முதலில் அதிகாரப்பூர்வமாகப் பயன்படுத்தப்பட்டது.

**அட்லாண்டிக் சாசனம்**

- இது உலக மக்களிடையே அமைதி மற்றும் பாதுகாப்பை உருவாக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு கொள்கை அமைப்பாகும்.
- 1941 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 - ஆம் நாள், அமெரிக்கா அதிபர் பிராங்களின் டி ரூஸ்வெல்ட்டு, இங்கிலாந்து பிரதமல் வின்ஸ்டன் சர்ச்சில் அட்லாண்டிக் கடலில் ஹெச். எம்.எஸ்.வேல்ஸ் பிரின்ஸ் என்னும் கப்பலில் பயணம் செய்யும் போது இந்த சாசனத்தில் கையொப்பமிட்டனர். எனவே இது அட்லாண்டிக் சாசனம் என அழைக்கப்படுகிறது.

**ஐக்கிய நாடுகள் சாசனம்**

- பல்வேறு நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளின் முடிவில் ஐக்கிய நாடுகள் அவை உருவானது.
- ஐக்கிய நாடுகள் அவையின் சாசனத்தை எழுதுவதற்குச் சான் பிரான்சிஸ்கோ நகரில் ஒரு மாநாடு ஏப்ரல் 25 - ஆம் நாள் 1945 - ஆம் ஆண்டு கூட்டப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் அவையின் இலக்குகள், நோக்கங்கள், விதிமுறைகள் ஆகியவற்றின் தொகுப்பே ஐக்கிய நாடுகள் அவை சாசனம் ஆகும். இச்சாசனத்தில் 50 நாடுகளின் பிரதிநிதிகள் ஜீன் 25 - ஆம் நாள் 1945 - ஆம் ஆண்டு கையெழுத்திட்டனர்கள். போலந்து மட்டும் பின்னர் கையெழுத்திட்டது.
- அக்டோபர் 25 - ஆம் நாள் 1945 - ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அவை தமது செயல்பாட்டைத் தொடங்கியது. எனவே அக்டோபர் 24 - ஆம் நாளை, ஐக்கிய நாடுகள் அவையின் நாளாக கொண்டாடப்படுகிறது.

**ஐ.நா.சபையை உருவாக்குவதற்கு முன் கூட்டப்பட்ட மாநாடுகள்**

- 1943 அக்டோபர் 30 - மாஸ்கோ
- 1943 டிசம்பர் 1 - டெக்ரான்
- 1944 செப்டம்பர் 21 - டம்பர்டன் ஒக்ஸ்
- 1944 அக்டோபர் 7 - டம்பர்டன் ஓக்ஸ்
- 1945 பிப்ரவரி 11 - யாபல்டா

**ஐ.நா. உறுப்பினர்கள்**

- அமைதியை விரும்பும் நாடுகள் ஐ.நா.வின் உறுப்பினர்கள் ஆகலாம்.
- தற்போது 193 நாடுகள் இதில் உறுப்பினராக உள்ளனர். இதன் தலைநகர் நியூயார்க்கில் 'மன்ஹாட்டன்'னில் பன்னாட்டு பகுதியில் அமைந்துள்ளது.

**ஐ.நா. சபையின் இலச்சினை, கொடி மற்றும் மொழிகள்**

- ஐந்து உள்வட்டங்களும், அதன்மீது வடதுருவத்திலிருந்து பார்த்தால் தெரியக்கூடிய வகையிலான உலகப்பட தோற்றமும், அதனைச் சூழ்ந்து ஆலீவ் இலைக்கொத்துகளும் கொண்ட படம் ஐ.நா.வின் இலச்சினையாக உருவாக்கப்பட்டுள்ளது.
- உலக அமைதியை குறிக்கும் வண்ணம் ஆலீவ் இலைக் கொத்துகளும், உலக அமைதி மற்றும் பாதுகாப்பினை அடைவதே ஐ.நா.வின் முக்கிய இலக்கு என்பதை எடுத்துரைக்க உலகபடமும் ஐ.நா.வின் இலச்சினையாக உருவாக்கப்பட்டுள்ளது.
- வெளிர் நீலநிறக் கொடியின் நடுவில் வெள்ளைநிறத்தில் ஐ.நா.வின் இலச்சினை பொறிக்கப்பட்ட கொடி, ஐ,நா,வின் கொடியாக அமைக்கப்பட்டுள்ளது.
- ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ருஷியன், சீனமொழி மற்றும் அரேபிய மொழி ஆகியவை ஐ.நா.வின் பொது மொழிகளாக இருக்கின்றன.

**ஐ.நா.வின் செயல்கள்**

- அமைதியை நிலைநாட்டல், முரண்பாடுகளை களைதல்
- அகதிகளுக்கு பாதுகாப்பு அளித்தல்
- தீவிரவாதம் தடுத்தல், படைவலிமைக் குறைப்பு
- மக்களாட்சியை மேம்படுத்துதல், தொடர் வளர்ச்சி
- பன்னாட்டு மக்கள் மற்றும் குழந்தைகள் நலன் மேம்படுத்தல்
- அம்மை நோயினால் ஏற்படும் இறப்பு விகிதத்தைக் குறைத்தல்
- போலியோ நோயை ஒழித்தல்.
- மலேரியா இறப்புகளைத் தடுத்தல்.
- உணவு உற்பத்தியைப் பெருக்குதல்.

**ஐ.நா.சபையின் நோக்கங்கள்**

- உறுப்பு நாடுகளுக்கு இடையே ஏற்படும் வேறுபாடுகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காணுதல்.
- உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டல்.

- நாடுகளிடையே நட்புறவுகளை உருவாக்குதல்.
- உலகப் பொருளாதாரம் சமூகப்பண்பாடு மற்றும் மனித இனம் சார்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஒத்துழைத்தல்.
- சமூக முன்னேற்றம், தரமான வாழ்வு மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் ஆகியன ஐ.நா.சபையின் நோக்கங்களாகும்.

**ஐ.நா.சபையின் 'ஆயிரம் ஆண்டு குறிக்கோள்'**

1. மிகுதியான ஏழ்மையையும், பட்டினியையும் நீக்குதல்.
2. அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளித்தல்.
3. பாலின சமத்துவத்தையும், பெண்களுக்கு அதிகாரமளித்தலையும் உருவாக்குதல்.
4. குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைத்தல்.
5. அன்னையர் உடல்நலம் பேணுதல்.
6. எய்ட்ஸ் - ஹெச்ஐவி, மலேரியா போன்ற நோய்களைக் களைய நடவடிக்கை எடுத்தல்.
7. சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல்.
8. முன்னேற்றப் பணிகளுக்காக உலகளாவியத் தோழமையை உருவாக்குதல்.

**ஐ.நா.சபையின் அமைப்புகள்**

ஐ.நா. 6 முக்கிய அமைப்புகளைக் கொண்டது

1. பொதுப்பேரவை
2. பாதுகாப்புப் பேரவை
3. பொருளாதார மற்றும் சமூகப் பேரவை
4. பன்னாட்டு நீதிமன்றம்
5. அறங்காவலம் பேரவை
6. பன்னாட்டு செயலகம்

**1.பொதுப் பேரவை**

- ஐ.நா.வின் அனைத்து அமைப்புகளில் மிக முக்கியமான அங்கம் பொதுப் பேரவை ஆகும்.
- இது மனித இனப் நாடாளுமன்றம் என்று அழைக்கப்படுகிறது.

- பொதுப்பேரவையில் அனைத்து உறுப்பு நாடுகளின் ஐந்து பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள். ஒவ்வோர் உறுப்பு நாட்டிற்கு ஒவ்வொரு வாக்கு உண்டு.
- ஆண்டுக்கு ஒரு முறை பெரும்பாலும் செப்டம்பர் மாதத்தில் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும்.
- பாதுகாப்புப் பேரவையின் வேண்டுகோளின்படி தேவைப்படும்போது அவசரக் கூட்டமும் நடைபெறும்.
- முக்கிய நடவடிக்கைகளான, அமைதி, பாதுகாப்பு, புதிய உறுப்பு நாடுகளைச் சேர்த்தல், வரவு, செலவு திட்டங்களை நிறைவேற்றுதல் ஆகியவற்றிற்கு 2/3 பங்கு உறுப்பினர்களில் ஆதரவு தேவை, மற்றத் தீர்மானங்களுக்கு சாதாரணப் பெரும்பான்மையே போதுமானது.

**பொதுப் பேரவையின் முக்கியச் செயல்பாடுகள்**

- தலைவரையும், 21 துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுப்பது.
- பாதுகாப்புப் பேரவையின் நிரந்தர உறுப்பினரல்லாதவர்களையும், ஐ.நா. சபையின் பிற அமைப்புகளுக்கான உறுப்பினர்களையும் தேர்ந்தெடுப்பது.
- ஆண்டு வரவு, செலவுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பது.
- பாதுகாப்புப் பேரவையின் பரிந்துரையின்படி, பொதுச்செயலர் மற்றும் பன்னாட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரை நியமனம் செய்வது.

**பாதுகாப்புப் பேரவை**

- ஐ.நா, அவையின் இரண்டாவது முக்கிய அமைப்பு பாதுகாப்பு அவை ஆகும்.
- இது ஐ.நா அவையின் நிர்வாக அமைப்பாக விளங்குகிறது.
- பாதுகாப்பு பேரவையானது 5 நிரந்தர உறுப்பினர்களையும், 10 நிரந்தரமற்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி, மொத்தம் 15 பேரைக் கொண்டது.
- ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் சீனா ஆகியவை நிரந்தர உறுப்பினர்கள்.
- மற்ற நிரந்தரமற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 2 ஆண்டுகளாகும். இவர்கள் பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- பாதுகாப்புப் பேரவையின் உறுப்பினர்கள் மாதம் ஒரு முறை கூடி புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பர். 2/3 பங்கு உறுப்பினர்களின் ஆதரவின் அடிப்படையில் முடிவுகள் தீர்மானிக்கப்படும்.
- நிரந்தர உறுப்பு நாடுகளுக்குத் தடுப்புரிமை ஆணை (Veto Power) உண்டு. இதனைப் பயன்படுத்தி ஒரு நிரந்தர உறுப்பு நாடு எந்த ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்ற முடியாமல் தடுக்க இயலும்.

- 2010 - ஆம் ஆண்டில் இந்தியா, பாதுகாப்பு பேரவையின் நிரந்தரமற்ற உறுப்பினராக 2 ஆண்டு காலத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**பாதுகாப்புப் பேரவையின் முக்கியச் செயல்பாடுகள்**

- உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்துதல்.
- உறுப்பு நாட்டுகளிடையே எழும் பிரச்சனைகளை அமைதி வழியில் தீர்வு காணுதல்.
- புதிய உறுப்பினரைச் சேகரிதக்கப் பரிந்துரைத்தல்.
- பாதுகாப்புப் பேரவையின் பொதுச் செயலர் தேர்தலில் பங்கெடுத்தல்.

**பொருளாதார மற்றும் சமூகப் பேரவை**

- ஐ.நா.வின் பொருயாதார, சமூகச் செயல்பாடுகளையும் மற்றும் ஐ.நா.வின் சிறப்பு நிறுவனத்தின் பணிகளையும் ஒருங்கிணைக்கிறது.
- இதன் 54 உறுப்பினர்கள் ஒவ்வொரு மூன்றாம் ஆண்டும் 1/3 உறுப்பினர்கள் பதவி விலகுவர்.
- இப்பேரவை, தேவை ஏற்படும் போதெல்லாம் ஆண்டு முழுவதும் கூடும்.
- இந்தப் பேரவையின் முக்கியக் கூட்டம் ஜீலை மாதம் நடைபெறும். இதில் பொருயாதாரப் பிரச்சனைகள், சமூக மனிதாபியமானப் பிரச்சனைகளான, சமூக வளர்ச்சி, பெண்கள் நிலை, குற்றங்களைத் தடுத்தல், போதை மருந்துகள் ஆகியவைப்பற்றி விவாதிக்கப்படும்.

**அறங்காவலர் பேரவை**

- தன்னாட்சி அதிகாரம் பெறாத 11 நாடுகளை நிர்வகிக்க 7 உறுப்பினர்கள் கொண்ட அறங்காவலர் பேரவை அமைக்கப்பட்டது. பேரவை மேற்பார்வை செய்த நாடுகள் தன்னாட்சி பெற உதவியது.
- 1994 - ஆம் ஆண்டுக்குள் இந்நாடுகளானைத்தும் சுதந்திரம் அடைந்தன. இப்பணி தற்போது நிறைவுற்றதால், வருங்காலத்தில் தேவை ஏற்பட்டால் அறங்காவலர் பேரவை செயல்பட தொடங்கும் வகையில் அறங்காவலர் பேரவை மாற்றியமைக்கப்பட்டது.

**பன்னாட்டு நீதிமன்றம்**

- பன்னாட்டு நீதிமன்றம் “உலக நீதிமன்றம்” என அழைக்கப்படுகிறது.
- இது ஐ.நா. அவையின் முக்கிய நீதி அமைப்பாகும் இந்நீதிமன்றத்துக்கான 15 நீதிபதிகள் பொதுக் குழுவாலும், பாதுகாப்புப் பேரவையாலும் தேரந்தெடுக்கப்படுவார்.

- உறுப்பு நாடுகளிடையே எழும் பிரச்சனைகளை இந்நீதி மன்றம் தீர்ப்பு வைக்கும். மேலும் ஐ.நா அவைக்கும், அதன்கீழ் செயல்படும் சிறப்பு நிறுவனங்களுக்கு தேவையான அறிவுரைகளையும் வழங்கும்.
- இது ஹாலந்து நாட்டில் உள்ள "ஹேக்" என்ற நகரில் அமைந்துள்ளது.

**செயலகம்**

- செயலகமானது ஐ.நா. சபையின் பொதுக்குழு, பதுகாப்புப் பேரவை, மற்றும் பிற அமைப்புகளின் வழிகாட்டுதலின்படி நிர்வாகப் பணிகளைச் செய்கிறது.
- பொதுச் செயலரின் தலைமையிலும், வழிகாட்டுதலிலும் செயலகத்தின் நிர்வாகப் பணிகளானது நடைபெறுகின்றன.
- தென் கொரியாவைச் சேர்ந்த பான்கீமூன், ஐ.நா வின் தற்போதைய பொதுச் செயலர் ஆவார். இவர் 2007 - ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.
- ஐ.நா. அவை மேலும் 30 சிறப்பு நிறுவனங்களின் துணையுடன் இலக்கினை அடைய அரும்பாடுபடுகிறது.
- FAO - உலக உணவு மற்றும் வேளாண் நிறுவனம் (Food and Adricultural Organization)
- ILO - பன்னாட்டு தொழிலாளர் நிறுவனம் (International Labour Organization)
- IMF - உலக நிதி நிறுவனம் (International Monetary fund)
- UNICEF - ஐ.நா. உலக நாடுகள் குழந்தைகள் நலநதி (United Nations international & Children Emergency Fund)
- UNESCO - ஐ.நா கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் (United nations Educational Scientific and Cultural Organization)
- WHO - உலக மக்கள்நல நிறுவனம் (World Health Organization)
- WTO - உலகளவிய வணிக நிறுவனம் (World Trade Organization)

**ஐ.நா அவையின் சாதனைகள்**

- உலக நாடுகளிடையே போரைத் தவிர்த்து, அமைதியையும், பாதுகாப்பையும் உருவாக்கி வருகிறது.
- உறுப்பு நாடுகளிடையே உள்ள சமூக, கலாச்சார, பொருளாதார, மனிதபிமானப் பிரச்சனைப் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுகிறது.

**ஐ.நா அவையின் பெரும் சாதனைகள்**

- 1946 -அல் ஈரானிலிருந்து ரஷ்யப் படைகளைத் திரும்பப் பெறவும், சிரியா லெபனான் நாடுகளிலிருந்து பிரிட்டன், பரான்ஸ் படைகளைத் திரும்பப் பெறவும் செய்தது.
- 1947 - இல் டச்சு நாட்டின் பிடியிலிருந்து இந்தோனேசியாவுக்கு விடுதலை வாங்கியது.

- 1956 - இல் சூயஸ் கால்வாய் பிரச்சனையை முடிவுக்குக் கொணர்ந்தது அதை அனைத்து நாடுகளின் பயன்னாட்டிற்குப் பொதுவாக்கியது.
- 1962 மற்றும் 1973 இல் எழுந்த, மத்திய கிழக்கு நாடுகள் பிச்சனையையும் கியூபா ஏவுகணைப் பிச்சனையையும் முடிவுக்கு கொண்டு வந்தது.
- 1988 - இல் ஏற்பட்ட ஈரான் -ஈராக் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.
- 1989 - இல் ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்யப் படைகளைத் திரும்பப் பெற செய்தது.
- 1990 - இல் குவைத் நாட்டிற்கு மேலாண்மையினை பெற்றுத் தந்தது. கம்போடியா, எல் சால்வேடர், கௌட்டாமேலா, மொசாம்பிக் ஆகிய நாடுகளின் உள்நாட்டுப் போர்களை முடிவுக்கு கொண்டு வந்தது.
- ஐ.நா சபையின் சிறப்பு அமைப்பாக உலக சுகாதார நிறுவனம் (WHO) பெரியம்மையை முழுவதும் நீக்கியதுடன் போலியோ, மலேரியா, காசநோய் ஆகியவற்றை உலகிலிருந்து நீக்கவும் உறுதியேற்று செயல்பட்டு வருகிறது.
- அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் மேலாண்யர் அலுவலகம் (UNCHR) அகதிகளுக்கு ஆற்றிய சேவைக்கான 1954 மற்றும் 1981 - ஆம் ஆண்டுகளில் நோபல் பரிசு பெற்றுள்ளது.

## 38. மனித உரிமைகள் - ஐக்கிய நாடுகள் சபை

- சமுதாயத்தில் மனிதன் சமூகமாக வாழத் தேவையான நிலையை உரிமை என அழைக்கிறோம். மனித உரிமைகள் மனிதனால் இயற்கையாக பெறப்பட்டவை ஆகும்.
- பேரறிஞர் **பொசாங்கோ** "உரிமைகள்" என்பன சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு, மனிதர்கள் நடைமுறைபடுத்தப் படுவதாகும்".
- மனித உரிமைகள், மனிதர்கள் முழு ஆளுமைத் திறமையை வெளிப்படுத்தி, அவனை முழு வளர்ச்சி அடையச் செய்கிறது.
- சமூக பொருளாதார உரிமைகளுக்கு மனித உரிமைகள்.
- இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மனித உரிமைகளை பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பிரகடனம் - 1948**

- ஐ.நா சபையின் முக்கியமான கோட்பாடுகளின் ஒன்று மனித உரிமைகளை பாதுகாப்பதும், அதனை மதிப்புறச் செய்வது ஆகும்.
- ஐ.நா சபையின் ஆலோசனையின் போரில், மனித உரிமைகளை உருவாக்க, மனித உரிமைகள் குழு அமைக்கப்பட்டது. இக்குழு மனித உரிமைகள் மசோதாவை தயாரித்து வழங்கியது.

- இம்மசோதா, ஐக்கிய நாடுகள் பொது சபையில் 1948- ஆம் ஆண்டு டிசம்பர் 10 - ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது. இதுவே “அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்” என்று அழைக்கப்படுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10 - ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
- அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், மக்களிடையே சமத்துவத்தை உறுதி செய்கிறது. இப்பிரகடனம் 30 சரத்துக்களைக் கொண்டது. இது இரு பகுதிகளான பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.
    1. வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள்
    2. பொருளாதாரம், சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள்

**வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள்**

இது நவீன ஜனநாயக்த்தோடு நெருங்கிய தொடர்பு உடையவைகளாகும்.

- மக்களின்வாழ்வு, சுதந்திரம் மற்றும் அவர்களின் பாதுகாப்பு உரிமைகள்
- அடமை முறை மற்றும் சித்தரதையில் இருந்து விடுதலை.
- சட்டத்தின் முன் அனைவரும் சமமாகக் கருதப்படுதல்.
- சொத்துரிமை
- அரசியலில் ஈடுபடும் உரிமைகள்.
- திருமணம் செய்து கொள்ளும் உரிமை.
- அனைத்து குழந்தைகளுக்கும் சமூக பாதுகாப்பு அளிக்கும் உரிமை போன்றவைகள் ஆகும்.

**சமூக - பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள்**

- வேலை செய்யும் உரிமை.
- சமமான வேலைக்கு சமமான ஊதியம் பெறும் உரிமை.
- தொழிற்சங்கத்தை உருவாக்கவும் அதில் சேரவும் உரிமை.
- தேவையான வாழ்க்கைத் தரத்தினை பெறும் உரிமை.
- கல்வியறிவு பெறும் உரிமை.
- பண்னாட்டுக் களத்தில் சுதந்திரமாக பங்கேற்கும் உரிமை.

**மனித உரிமைகள் பாதுகாப்பு**

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், அனைத்து நாடுகளுக்கும் ஏற்புடையதாகும்.

1966 - ஆம் ஆண்டு ஐ.நா.சபை மனித உரிமைகளை பாதுகாக்க இரு ஒப்பந்தங்களை உருவாக்கியது.

- அனைத்துலக பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் ஒப்பந்தம்.
- அனைத்துலக வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தம்.
- ஐ.நா.வின் உறுப்பு நாடுகள் இவ்வுரிமைகளின் பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளிக்க கடமைப்பட்டுள்ளன.
- 1993 - ஆம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் வெளியிடப்பட்ட தனது பிரகடனத்தில் (வியன்னா பிரகடனம்) மனித உரிமைகளைப் பாதுகாப்பதும் மேன்மையடையச் செய்வதும் பன்னாட்டு சமூகத்தின் சட்டப்பூர்வமான நோக்கமாக இருக்க வேண்டும் எனக் கூறியது.
- இதன்படி இந்திய அரசாங்கம் 1993 - ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றி, தேசிய மனித உரிமைகள் ஆணையத்தை டெல்லியில் கி.பி. 1993 - ஆம் ஆண்டு ஏற்படுத்தியது.
- மாநிலங்களிலும் மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது. இவ்வாணையத்தின் நோக்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதும் மேம்பாடு அடையச் செய்வதும்.

**தேசிய மனித உரிமைகள் ஆணையம்**

- 1993 - ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மனித உரிமைகள் சட்டத்தின்படி தேசிய மனித உரிமைகள் ஆணையம் இந்தியாவில் அக்டோபர் 12, 1993 - தேசிய மனித உரிமைகள் ஆணையம் இந்தியாவில் அக்டோபர் 12, 1993 - ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாணையம் தலைவர் ஒருவரையும், நான்கு உறுப்பினர்களையும் கொண்டது.
- இவ்வாணையத்தின் தலைவர் பொதுவாக ஒய்வு பெற்ற உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருப்பார்.
- ஆணைத்தின் ஒரு உறுப்பினார் உச்சநீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும், மற்றொரு உறுப்பினர் மாநில உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும் மீதமுள்ள இரு உறுப்பினர்கள் மனித உரிமைகள் சார்ந்த செயல் அனுபவமிக்கவராக இருக்க வேண்டும். இவர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

**அமைப்பு**

- தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமையிடம் புது டில்லி ஆகும்.

- குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படும் மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரின் ஆணையின் பேரில் பணி நீக்கம் செய்யப்படலாம்.
- ஆணையத்தின் தலைவர் 5 ஆண்டுகளோ அல்லது 70 வயது வரையிலோ இப்பதவியில் பணியாற்றலாம். மற்ற உறுப்பினர்கள் 5 ஆண்டுகள் பதவி வகிக்கலாம்.
- குடியரசுத் தலைவர் விரும்பினால் இவர்களை மீண்டும் 5 ஆண்டுகள் மறுநியமனம் செய்யலாம்.

**ஆணையத்தின் பணிகள்**

- இதன் முக்கிய நோக்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் ஆகும்.
- மனித உரிமைகள் சம்பந்தமாக ஆய்வுகள் நடத்திய, அது சம்பந்மான கல்வியறிவினை மக்களிடையே பரப்புவது.
- ஊடகங்கள் மூலமாகவும், கருத்தரங்கம் மூலமாகவும் மனித உரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- மனித உரிமைகள் மீறப்படும் போது பாதிக்கப்பட்டவர்கள் மனு செய்தாலோ அல்லது ஆணையம் தானாகவே முன் வந்து பாதிக்கப்பட்டவர்களை விசாரித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கும்.
- தேசிய மனித உரிமைகள் ஆணையம் கீழ்க்கண்டவற்றிற்கு முன்னுரிமை வழங்கி பணியாற்றுகிறது.
- மக்களின் வாழ்வியல் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், மனித உரிமைகளுக்கு எதிராக கொண்டுவரப்படும் சட்டத்தினை ஆய்வு செய்யவும்.
- காவல் துறையினரின் வன்முறை மற்றும் கற்பழிப்பு போன்றவற்றை அகற்றுவது சம்பந்தமாகவும்,
- ஆதிதிராவிடர் மற்றும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னுரிமை வழங்குகிறது.

**அதிகாரங்கள்**

- தேசிய மனித உரிமைகள் ஆணையம் வாழ்வியல் நீதிமன்றத்திற்குரிய அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருக்கிறது.
- அரசிற்கு ஆண்டு தோறும் தனது அறிக்கையை இவ்வாணையம் அனுப்புகிறது, அரசாங்கம் இவ்வறிக்கையினை பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் தாக்கல் செய்த, இதனடிப்படையில் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன அல்லது எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்பதை தெரிவிக்கும்.

**மாநில மனித உரிமைகள் ஆணையம்**

- தமிழ்நாட்டில் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 - ஆம் நாள் மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது.

**அமைப்பு**

- மாநில மனித உரிமைகள் ஆணையம் ஒரு தலைவரையும், நான்கு உறுப்பினர்களையும் உள்ளடக்கியது.
- ஆணையத்தின் தலைவர் - மாநில உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதியாவார்.
- ஆணையத்தின் ஒரு உறுப்பினர் ஓய்வு பெற்ற மாநில உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும், மற்றொரு உறுப்பினர் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியாகவும்,
- எஞ்விய இரண்டு உறுப்பினர்கள் மனித உரிமைகள் சார்ந்த செயலனுபவம் மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும்.
- ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மாநில முதலமைச்சர், மாநில உள்துறை அமைச்சர், சட்டமன்ற தலைவர், சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் ஆகியோரைக் கொண்ட குழுவின் பரிந்துரையின் பேரில் மாநில ஆளுநர் நியமனம் செய்கிறார்.
- ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக, செயலத் செயல்படுகிறார்.
- இவ்வாணையம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.
- இந்திய அரசியலமைப்பில் பகுதி II, பகுதி III-ல் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் மீறப்படும் போது இவ்வாணையம் விசாரணை செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு எரிய நிவாரணம் அளிக்கும்.
- மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் 70 வயது வரையோ அல்லது 5 ஆண்டுகளோ பணியாற்றலாம்.
- ஆணையத்தின் உறுப்பினர்கள் முறை தவறி செயல்பட்டால், மாநில ஆளுநர் அவர்களை பணி நீக்கம் செய்யலாம்.

**பணிகள்**

- மாநில மனித உரிமைகள் ஆணையம் ஆண்டு தோறும் அரசாங்கத்திற்கு தனது அறிக்கையை அனுப்புகிறது.
- இவ்வறிக்கையில் தாம் செய்து முடிந்த பணிகள் பற்றியும், அரசாங்கம் மனித உரிமைகளை காக்க எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கும். அரசாங்கம் இவ்வறிக்கையினை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யும்.

**மாவட்ட மனித உரிமைகள் நீதிமன்றங்கள்**

- மனித உரிமைகளை காக்க மாவட்ட அளவில் நீதிமன்றங்களை - மாநில அரசாங்கம் உருவாக்கி உள்ளது.
- மாவட்ட அளவில் நடைபெறும் மனித உரிமைகள் மீறல்களை இந்நீதிமன்றம் விசராணை செய்யும்.
- இந்நீதிமன்றத்தில் நீதிபதியாக ஏழு ஆண்டுகள் வழக்கறிஞராக பணியாற்றியவர் அல்லது அரசு வழக்கறிஞர் நியமிக்கப்படுகிறார்.
- இந்நீதிமன்றங்கள் விரைவாக மனித உரிமைகள் மீறல்களை விசாரணை செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க வகை செய்கிறது.

**பெண்களின் உரிமைகள்**

- இந்திய அரசு சுதந்திரம் பெற்ற பிறகு பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை அகற்ற பெண்களின் தரத்தை உயர்த்த பல்வேறு சட்டங்களை இயற்றியுள்ளது.
- 1856 - ஆம் ஆண்டு இந்து விதவை மறுமணம் சட்டபூர்வமாக்கப்பட்டது.
- 1955 - ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின்படி தாய் தந்தையரின் சொத்தில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட்டது.
- 1961 - ஆம் ஆண்டு வரதட்சணை தடைச் சட்டத்தின்படி வரதட்சணை வேண்டி பெண்களை கொடுமைப்படுத்துவது கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகக் கருத வழி செய்தது.
- தமிழக அரசு இந்து திருமண சட்டத்தில் 1967 - ஆம் ஆண்டில் ஒரு திருத்தம் கொண்டு வந்து சுயமரியாதை திருமணங்களை சட்டபூர்வ திருமணங்களாக அங்கீகரித்துள்ளது.
- 1997 - ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களை கேலி செய்வதை தடுக்கச் சட்டம் இயற்றியுள்ளது.
- 1999 - ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களை அநாகரிமாக சித்தரித்து சுவரொட்டிகள் வெளியிடுவதை தடை செய்துள்ளது.

**பெண்களின் உரிமைகளும், சட்டங்களும்**

- இந்திய அரசியலமைப்புச் சட்டம், சரத்து 23 மற்றும் 24 பெண்களின் விடுதலைப் பற்றிக் கூறுகிறது.
- பெண்கள் சுரண்டப்பட்டு ஏமாற்றுதலை எதிப்பதற்கான உரிமைகளும் சட்டங்களும் உள்ளன.
- குடும்பச் சொத்துகளில் மகன்களோடு, மகள்களும் உரிமைகோர சட்டம் இடம் அளிக்கிறது.
- 1978 இல் உருவாக்கப்பட்ட குழந்தைத் திருமணத் தடைச் சட்டத் திருத்தம் - பெண்களின் திருமணவயது 15 லிருந்து 18 ஆகவும், ஆணின் திருமண வயது

18 லிருந்து 21 ஆகவும் உயர்த்தியுள்ளது. இது குழந்தைத் திருமணத்தைத் தடை செய்கிறது.

- 1986 இல் கொண்டு வரப்பட்ட வரதட்சணைத் தடைச்சட்டத்திருத்தம், வரதட்சணை வாங்குபவர் வரதட்சணை தொடர்பாக பெண்களை கொடுமைப்படுத்துபவர். மீது கடுமையான தண்டனை கொடுக்க வழி வகுத்துள்ளது.
- தமிழ்நாடு அரசு 1997 இல் (ஈவ்டீசிங்) பெண்களை இகழ்தல் தடைச் சட்டம் இயற்றியுள்ளது. 2002 இல் உருவாக்கப்பட்ட இதன் திருத்தம் பெண்களுக்குத் தொல்லை கொடுப்பதைத் தடை செய்துள்ளது.
- 73 ஆவது மற்றும் 74 ஆவது அரசியல் சட்டத் திருத்தம் ஊராட்சி அமைப்புகளிலும், உள்ளூர் அமைப்புகளிலும், பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை கொடுத்துள்ளது.

**பெண் தொழிலாளர் நலச்சட்டம்**

- 1948 - ஆம் ஆண்டு தொழிற்கூட சட்டம்.
- 1951 - ஆம் ஆண்டின் தோட்டத் தொழிலாளர் சட்டம்.
- 1952 - இல் சுரங்கச் சட்டம் ஆகியவைகள் ஆண், பெண் வேறுபாடின்றி சம ஊதியம் வழங்க வழிவகை செய்தது.
- 1961 - ஆம் ஆண்டு பெண்களின் உடல்நலம் காக்க பேறுகால பயன் சட்டம் இயற்றப்பட்டு, பேறு காலத்தில் பெண்களுக்கு முறையான ஊதியம் வழங்க வழிவகை செய்யப்பட்டது.
- மார்ச் 8 - ஆம் நாள் சர்வதேச பெண்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- பெண்கள் உரிமையை உறுதி செய்ய 1995 - ஆம் ஆண்டு சீனத் தலைநகர் பெய்ஜீங்கில் உலக பெண்கள் ஒன்று கூடி, "பெண்கள் உரிமைகள், மனித உரிமைகளே, மனித உரிமைகள் பெண்கள் உரிமைகளே" என முழக்கமிட்டனர்.
- ஐ.நா. சபை 1978 - ஆம் ஆண்டை சர்வதேச பெண்கள் ஆண்டாக அறிவித்தது.

**பெண்களின் அமைப்புகள்**

பெண்களின் நலன் காக் இந்திய பெண்கள் சங்கம், ஜனநாயக மாதர் சங்கம் மற்றும் பெண்ணுரிமை இயக்கம் ஆகியவைகள் போராடி வருகின்றன. இவைத் தவிர அரசு சாரா தன்னார்வ அமைப்புகளான அரிமா சங்கம், ரோட்டரி சங்கம், இன்னார்வீல் சங்கம் போன்றவைகளும் பெண்களின் நலனைக் காக்க பாடுபட்டு வருகின்றன.

**குழந்தைகள் உரிமைகள்**

- பிரிவு 39 (e) ன் படி இந்திய அரசியலமைப்பு குழந்தைகள் சுதந்திரமாகவும் உடல் ஆரோக்கியத்துடனும் வாழ வகை செய்கிறது.
- பிரிவு 45 - ன் படி அரசாங்கம் எல்லா குழந்தைகளுக்கும் 14 வயது வரை கட்டாய இலவசக் கல்வி வழங்கிட வழி வகை செய்துள்ளது.
- சிறுவர்களுக்கு எதிரான அநீதி சட்டம் 1986 - ஆம் ஆண்டு இயற்றப்பட்டு இளம்சிறார்கள் முறையாக பாதுகாக்கப்படவும் அவர்கள் திருந்தி வாழவும் வழி செய்துள்ளது.
- ஐ.நா.சபை 1979 - ஆம் ஆண்டை சர்வதேச குழந்தைகள் ஆண்டாக அறிவித்துள்ளது.